பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 14 வியாழக்கிழமை (27.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 122



## இலங்கை ஆயுதங்களை வாங்கிக் குவிப்பது இந்தியாவின் பிரசித்தமான இடத்தைப் பாதிக்கும்!

### நாராயணனின் அபாய சமிக்ஞை!!

புதுடில்லி, மார்ச் 27

இலங்கை வேறு நாடுகளில் இருந்து ஆயுதங்களை வாங்கிக் குவிக்கிறது. இது தென்னாசியாவில் இந்தியா வகித்துவரும் பிரசித்தமான இடத்தைத் தலைகீழாக்கும் நிலையை உருவாக்கலாம். இது கவலைக்குரிய போக்காகும். இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன்.

இலங்கைத் தமிழர்களை அந்த நாட்டு அரசாங்கம் கௌரவமான முறையில் நடத்தவேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும் என்றும் நாராயணன் சொன்னார்.

இந்தியாவின் 25ஆவது விமானப்படைத் தளபதி ஏயார் மார்ஷல் பி.ஸி. லாலின் நினைவு சொற்பொழிவிலேயேஅவர் இக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இங்கு மனித உரிமை நிலைவரம் மிகமோசம் என்கிறது பிரி. அரசு

## ஆனால் பட்டியலில் சேர்க்கப்படவில்லை

லண்டன், மார்ச் 27

**உலக நாடுகளில் 2007ஆம் ஆண்டில் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான தனது வருடாந்த அறிக்கையை நேற்றுமுன்தினம் வெளியிட்டிருக்கும் பிரிட்டன், அதில் இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்ந்தும் மிக மோசமாக உள்ளதாகத் தெரிவித்திருக்கின்றது.**

**எனினும், உலகில் மனித உரிமைகள் நிலைவரம் கவலைக்குரிய கட்டத்தை அடைந்திருப்பதாகத் தெரிவித்து பிரிட்டன் பட்டியலிட்ட இருபத்தியொரு நாடுகளில் இலங்கையின் பெயர் இல்லை.**

பிரிட்டிஷ் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அமைச்சு விடுத்துள்ள மிக நீண்ட அந்த அறிக்கையில் இலங்கை தொடர்பாகக் கூறப்பட்டுள்ள சில அம்சங்கள் வருமாறு:-

இலங்கையின் மனித உரிமை நிலைவரம் மிக மோசமாகவுள்ளது.

தொடரும் மோதல்களின் அறிகுறியாகவும் காரணியாகவும் மனித உரிமை மீறல்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## லியம் பொக்ஸ் – ரணில் இன்று சந்தித்துப் பேச்சு

கொழும்பு, மார்ச் 27

இலங்கை அரசாங்கத்தின் - வெளிவிவகார அமைச்சரின் - அழைப்பின் பேரில் கொழும்பு வந்துள்ள பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் லியம் பொக்ஸ், இன்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து நாட்டின் அரசியல் நிலைமை குறித்துப் பேச்சு நடத்துவார்.

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் இனப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இணைந்த வடக்கு-கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனி அலகு!

### சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு இப்படி இணக்கம்

கொழும்பு, மார்ச் 27

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட தனி அலகு ஒன்றை உருவாக்குதல்.

- இத்தகைய அதிகாரப் பகிர்வுத் திட்டம் ஒன்றுக்கு சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் கடந்த திங்களன்று இணக்கம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தற்போதைய கூட்டத் தொடருக்குச் சமுகம் தரும் சகல கட்சிகளின் பிரதிநிதிகளுமே இத்தகைய யோசனைக்குப் பூரண ஆதரவை வழங்கியிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

சர்வகட்சிப்பிரதிநிதிகள் குழுவின் கூட்டங் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு காஞ்சிரங்குடாப் பகுதியில் கிளைமோரில் 2 கான்ஸ்டபிள்கள் பலி

### நான்கு பொலிஸார் மற்றும் சிவிலியன் காயம்

கொழும்பு, மார்ச்.27

மட்டக்களப்பு மாவட்டம் காஞ்சிரங்குடா, மணல்காடுப் பகுதியில் நேற்றுக்காலை 9.10 மணியளவில் வீதியோரத்தில் வெடித்த கிளைமோர்க் குண்டில் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் உயிரிழந்தனர். இரண்டு விசேட அதிரடிப்படையினர் உட்பட நான்கு பொலிஸாரும் சிவிலியன் ஒருவரும் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு உன்னிச்சையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டட நிர்மாணப் பணிகளைப் பார்வையிடுவதற்காக நேற்றுக்காலை மட்டக்களப்பு நகரில் இருந்து ஜப்பானிய தொண்டு நிறுவன அதிகாரிகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் வான் தாக்குதல்

கொழும்பு, மார்ச் 27

வன்னியில் உள்ள விடுதலைப் புலிகளின் பல்வேறு பகுதிகளில் நேற்றுக்காலை விமானப்படையினரின் வான் கலங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் பெரிய ஆற்றின் வடக்குப் புறத்தே உள்ள கலியடஞ்சானில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளை (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து தப்பிவந்தோர் மீது இரண்டு தரப்பும் சூடு

### மூவர் பலி; ஓமந்தையில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 27

வவுனியா ஓமந்தை இராணுவ முன்னரங்கப் பகுதியை நோக்கி விடுதலைப் புலிகளின் பகுதியில் இருந்து தப்பிவந்தவர்கள் என்று கூறப்படுபவர்கள் மீது இருதரப்பினரும் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்தனர். அத்துடன், ஐவரைப் படையினர் கைதுசெய்துள்ளனர் என்று (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் இருந்து இந்தியா புறப்பட்ட 11 பேர் படகுடன் கடற்படையால் கைது

### ஒரு குழந்தை, 2 சிறுவர்கள் உட்பட

யாழ்ப்பாணம், மார்ச் 27

வன்னிப் பகுதியிலிருந்து படகுமூலம் இந்தியாவுக்குச் செல்லமுயன்ற 11 பேர் செவ்வாய்க்கிழமை அதிகாலை காரைநகர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட 11பேரும் நேற்று ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டு நேற்றே ஊர்காவற்றுறை நீதி (12 ஆம் பக்கம் பார்க்க)

KOKUVIL HINDU COLLEGE

JHC Vs KHC BATTLE OF THE HINDUS

JAFFNA HINDU COLLEGE

OFFICIAL MEDIA SPONSOR: உதயன் @ Kokuvil Hindu College grounds 29th & 30th of March 2008

# பண்டத் தரிப்பு சுற்று வட்டச் சந்திக்கு செல்லாது இடையில் திரும்பும் யாழ்.-இளவாலை மினிபஸ்கள்

## பிரயாணிகள் சிரமங்களை எதிர் கொள்வதாக முறைப்பாடு

வலி.தென்மேற்கு,மார்ச் 27

யாழ்ப்பாணம்-இளவாலை 788 பாதை இலக்க மினிபஸ் சேவை கடந்த இருவார காலமாக பண்டத்த ரிப்பு சந்திக்கு சென்று திரும்பாமல் பண்டத்தரிப்பு வளை வில் திரும்பிச் செல்வதால் பிரயாணிகள் பெரும் சிரமங் களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பண்டத்தரிப்பு சுற்றுவட்ட சந்தியில் பாடசாலை மாணவர்களும் அரச அலுவலகங்களில் கடமையாற்றச் செல்வோரும் காத்திருந்து இந்த 788 இலக்க மினி பஸ்களில் பிரயாணம் மேற் கொண்டு வந்தனர். தற் போது இந்த வழக்கமான நடைமுறை மாற்றப்பட் டிருப்பதால் தாங்கள் பலத்த அசௌகரியங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்ற னர். 788 இலக்க மினிபஸ்ஸில் பயணிக்க பண்டத்த ரிப்பு சந்தியில் இருந்து சுமார் 200 மீற்றர் தூரம் நடந்த வந்து சந்தையடியில் நின்றே தாம் பயணிக்க வேண்டி யுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். சில்லாலை பண்டத்தரிப்பு பகுதிகளில் இருந்து சண்டிலிப்பாய் பிர தேச செயலகத்துக்கு செல்வோரும் சிர மங்களை எதிர் நோக்குகிறார்கள்.

இது தொடர்பாகப் பிரயாணிகள் சம்பந்தப் பட்ட அதி காரிகளுக்கும் கடிதம் மூலம் முறைப் பாடு செய்துள் ளனர்.

யாழ்-இளவாலை 788 இலக்க மினிபஸ் ஆரம்பிக்கப் பட்ட நாள் முதல் பண்டத்தரிப்புச் சுற்று வட்டச் சந்திக்கு சென்றே சேவை இடம் பெற்றதாகவும் தற்போது வழ மைக்கு மாறாக இந்த சேவை பண்டத்த ரிப்புச் சந்தையுடன் மட்டுப் படுத்தப்பட் டுள்ளதனால் பாடசாலை மாணவர்கள் அரச அலுவலர்கள், வைத்தியசாலைக் குச் செல்வோர் தனியார் நிறுவனங்களில் கடமை புரிவோர் உட்பட அனைவரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இது பற்றி யாழ்-இளவாலை 788 இலக்க சிற்றூர்திச் சங்கத்திடம் கேட்ட போது, தாம் பண்டத்தரிப்பு சுற்று வட்டச் சந்திக்கு சென்று சேவையில் ஈடுபடுவதற்கு வேறு ஒரு சிற்றூர்திச் சங்கம் எதிர்ப்புத் தெரிவித் துள்ளதாகவும் சுற்று வட்டத்துக் குச் செல்ல வேண்டாமென மோட்டார்ப் போக் குவரத்து ஆணையாளரினால் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டதாகவும் இதனால் தாம் அங்கு செல்ல முடியாத நிலை ஏற் பட்டுள் ளதாகவும் தெரிவித்தார்.


இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதி அற் புத தேசிய ஔஷதம்

சித்தாரா பனங்கற்கண்டு இருமல் பாணி

யாழ். குடாநாட்டில் அனைத்து பாமர்சிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Manufactured by:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382)
AR/PR/No:- 228

யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.

(குறிப்பு: சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி/551682)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பிரதி அதிபர் திரு .இ .சண்முகேஸ்வரன் அவர்களின் அன்புத்தாயார்

### திருமதி இரத்தினம் பஞ்சவர்ணம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தி னருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

கல்லூரிச் சமூகம்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை,
யா/பொன் பரமானந்தர் ம.வி.

(72471)

## துயர் பகிர்கிறோம்

எமது துறைத்தலைவர்
இ.விக்னேஸ்வரனின் பாசமிகு தாயார்

### திருமதி இரத்தினம் பஞ்சவர்ணம்

அவர்கள் 26.03.2008 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கணித புள்ளி விவரவியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(72474)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வரத்தினம் கணேசன்



சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிட மாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் கணே சன் 24.03.2008 திங்கட்கிழமை சிவபதமடைந் தார்.

அன்னார் காலஞ்சென்ற பபி(Bubby) என அழைக்கப்பட்ட ஆறுமுகம் கணேசன் அவர்களின் அன்பு மனைவியும், விக்கி என அழைக்கப்படும் விக்னேசன் (கிட்சுடா நிறு வனம், கொழும்பு), அசோக்குமார் (ஐக்கிய நாடுகள் சபை, நியூ யோர்க்), சுகுமார் (கனகாம்பிகை நகைமாளிகை, சுக்ஷி குரூப், கனடா), சிவநேசன் (சிகாரா டிரேடிங், கனடா), திருமதி ரஜினி சத்தியவான் (ஆஸ்திரேலியா), திருமதி சுலோசனா மகேசன் (ஆஸ்திரேலியா), சூட்டா என அழைக்கப்படும் சுரேஸ் (Joe Alfredos, - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகிர்தம் (ஆஸ்திரேலியா), கிறிஸ்ரீன் (நியூயோர்க்), ஷீலா (கனடா), சத்தியவான் (ஆஸ்திரேலியா), றோய் மகேசன் (ஆஸ்திரேலியா), சித்ரா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜோனத்தன், ஜோர்ஜ், சேரா, சஞ்சே, சோபி, கஜன், ரஜீவ், லாவண்யா, வித்தியா, றிபேக்கா, சுதேவ், சுஜீத்தா ஆகியோரின் பாசமிகு பாட்டியும் காலஞ்சென்றவர்களான அன்னரத்தினம், பத்மநாதன், அருணாசலம், சரவணமுத்து மற்றும் யோகரத்தினம் (கனடா), ரெங்கநாதன் (கண்டி), சோமசுந்தரம் (கொழும்பு), சரோஜினி தேவி (யாழ்ப்பாணம்), கனகசுந்தரம் (கொழும்பு), கமலாதேவி (யாழ்ப்பாணம்), ராசதுரை (அசோசியேட் மார்க்கட்டிங், கொழும்பு), ஜெயதேவி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகாதேவா, மகேசன் (சட்டத்தரணி), மயில்வாகனம் (டி.ஐ.ஜி), மகேந்திரன் ஆகியோரின் மைத்துனி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 33 Memory Gardens Lane இல் அமைந்துள்ள High Land Memory Gardens. ந.ப. 12 - பி.ப. 2 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P. :- +16472996915.
+14164920946.
+14168030632.

(சி/552007)

தகவல்:
விக்கி (மகன்)

## மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.இந்நிகழ்விற்கு பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் தலைமை வகிப்பார்.

* * *

ஹரித்தாஸ் - கியூடெக் பெண்கள் ஒன்றி யத்தின் இளவாலை பிராந்திய குழுக்கள் இணைந்து நடத்தும் மகளிர் தின விழா நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 11 மணிக்கு பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

## கருத்தரங்கு

சர்வதேச கெயார் நிறுவனம் நடத்தும் தென்னை பயிர்ச் செய்கையின் அபிவிருத்தி யும் அதனை பாதிக்கம் காரணிகளும் என்ற தொனிப் பொருளிலான கருத்தரங்கு எதிர் வரும் திங்கட் கிழமை காலை 9 மணிக்கு பண்டத் தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண் டபத்தில் நடை பெறவுள்ளது.

தென்னை அபிவிருத்தி சபையின் அனு சரணையுடன் நடைபெறும் இக் கருத்தரங் கில் பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங் கம் கலந்த கொள்வர்.

கெயார் நிறுவன யாழ்.பிராந்திய பணிப் பாளர் எஸ்.இராசரத்தினம், தென்னை அபி விருத்தி சபை பிராந்திய முகாமையாளர் எஸ்.தெய்வேந்திரம் ஆகியோர் இதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவர்.

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, மார்ச் 27

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழ கங்களுக்கு இடையே இடம் பெற்றுவரும் ஆண்களுக்கான கிரிக்கட் போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதி ஆட்டங்கள் மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் இன்று பி.ப 2.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

உரிய கழகங்களை குறிப்பிட்ட நேரத்துக்கு சமூகம் அளிக்கும்படி வலி.தெற்கு பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் செல்வி மணோன்மணி கேட்டுள்ளார். (2-861)

* * *

நியூபவர் வேல்ட் மற்றும் பியூட்டி செலக் ஸன் ஆகியன இணைந்து யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசர ணையுடன் நடத்திவரும் கூடைப்பந்தாட் டச் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கூடைப்பந் தாட்ட திடலில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட் விளையாட்டக்கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையா ட்டு அணி மோதவுள்ளது. (2-86)

* * *

ஒத்திவைக்கப்பட்டிருந்த தெல்லிப் பளை கோட்டமட்ட பாடசாலைகளின் விளை யாட்டுப் போட்டிகள் இம்மாதம் 29ஆம் 30ஆம் திகதிகளில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கோட்டப் பணிப்பாளர் வி.கைலாசநாதன் இதனைத் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்கள்

### சண்முகரத்தினம் சிவானந்தன் (மண்டைதீவு)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் 709/1, கே.கே.எஸ். வீதி, (யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில்) யாழ்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சண்முகரத்தினம் சிவானந்தன் நேற்று (26.03.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகரத்தினம் - நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், மஞ்சுளா (கனடா), சதானந்தன் (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், உமா பரமேஸ்வரி, தயாளன் ஆகியோரின் மைத்துனரும் Dr.மயில்வாகனத்தின் மருமகனும் அதிசயாவின் சித்தப்பாவும் அபிநயா, மைஷா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2008) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

709/1, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (A)

தகவல்:
சண்முகரத்தினம் (தந்தை)

### திருமதி முருகேசு மாணிக்கம்

அராலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகேசு ஆசிரிய ரின் அன்பு மனைவி திருமதி முருகேசு மாணிக்கம் (26.03. 2008) புதன்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் சுழிபுரம் வடக்கு காலஞ்சென்ற திரு. திருமதி முத்துத் தம்பிப்பிள்ளை(ஆசிரியர்) இன் அன்பு மகளும் திருமதி எ.சிவபாக் கியம், பத்மநாதன் (ஓய்வுபெற்ற மின்சாரப் பொறியியலாளர்), சபாநாதன்(கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்), சிவநாதன் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற எதிர்மன்னசிங்கம் மற்றும் திருமதி.ப.சிவபதி அம்பாள், திருமதி ச.வசந்தா(ஆசிரியர், அராலி கிழக்கு அ.மெ.பாடசாலை ), திருமதி சி.பத்மினி ஆகியோரின் அன்பு மாமியும் சிறீசக்திவேல் (வவு னியா கல்வி அலுவலகம்), ஜெயவேல், சங்காரவேல், சிவமதி, சிவ ரூபவேல், பத்மா, முருகவேல், கௌரி, மலர்விழி, ஆலவன், ஆதீ பன், அகிலவன், கிரிஷாந்தினி, பிரசாந் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (28.03.2008) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணியளவில் வவுனியாவில் நடை பெ றும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகன்மார்: மு.பத்மநாதன் (இலங்கை மின்சார சபை, சுன்னாகம்), மு.சபாநாதன் (கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்).
சித்தன்கேணி.

### "சமூகச் செம்மல்" முருகேசு நமசிவாயம் (ஓய்வு பெற்ற அதிபர்)

தொல்புரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நமசிவாயம் அவர்கள் (28.03.2008) புதன் கிழமை கால்மானார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொல்புரம் கிழக்கு,
சழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி இரத்தினம் பஞ்சவர்ணம்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் பஞ் சவர்ணம் நேற்று (26.03.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு இரத்தினத் தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத் தம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அருமை மகளும், திருமதி பாலதேவி இராசையா, திருமதி கமலாதேவி செல்வரத்தினம், காலஞ்சென்ற சின்னத்தம்பி நட ராசா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற திருமதி மேனகா பால சுப்பிரமணியம் மற்றும் கலாநிதி இ.விக்னேஸ்வரன் (தலைவர், கணித புள்ளிவிவரவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்), இ.சண் முகேஸ்வரன் (பிரதிஅதிபர், தொல்லிப்பழை யூனி யன் கல்லூரி), திருமதி ரேணுகா (கனடா), மல்லிகா (U.K.) ஆகியோரின் அரு மைத் தாயாரும் காலஞ்சென்ற ஆ.பாலசுப்பிரமணியம் மற்றும் பவானி, ஜீவகாந்தி, சிவகுமார் (கனடா), ஆனந்த முருகன்(U.K.) ஆகியோரின் அன்புமாமியும் சுஜீபன் (கனடா), ஜெனீபன்(கனடா), இனியாள், ஆரபி, கனிமொழி, கபிலன் (கனடா), நிலானி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2008) வியா ழக்கிழமை இணுவில் கிழக்கு வங்கியடியில் உள்ள அவரது இளைய மகன் சண்முகேஸ்வரனது இல்லத்தில் பி.ப. 2 மணியளவில் நடை பெற்று பி.ப. 3 மணிக்கு பூதவுடல் காரைக்கால் இந்து மயானத் தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

வங்கியடி ஒழுங்கை,
இணுவில் கிழக்கு.
தொ.பே. 0214591970 (72473)

மகன்மார்:
கலாநிதி இ.விக்னேஸ்வரன் (யாழ்.பல்கலைக்கழகம்),
இ.சண்முகேஸ்வரன் (யூனியன் கல்லூரி)

### சின்னத்தம்பு கிருஷ்ணமூர்த்தி

கச்சேரியடியைச் சேர்ந்த சின்னத்தம்பு கிருஷ்ணமூர்த்தி நேற்று (26.03.2008) புதன்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்ற சின்னத்தம்பு-மகேஸ்வரி தம்பதியி னரின் மகனும்,இந்திராணி, செல்வராணி, சிவசுப்பிரமணியம் (அசோகா), தமயந்தி, கோசலை, காலஞ்சென்ற சிவலிங்கம் ஆகி யோரின் சகோதரனும், பத்மநாதன், யோகலிங்கம், கதிர்காமதேவி, தியாகராசா, காலஞ்சென்ற அயத் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.03.2008) புதன் கிழமை இல 28, சிவப்பிரகாசம் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

28, சிவப்பிரகாசம் வீதி
யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி பத்மநாதன்
(சகோதரி)



யாழ்.இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் கலாநிதி அனுஷியா சத்தியசீலன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் சத்தியசீலன், உபஅதிபர் பொ.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும் பிரதம விருந்தினரை ஆசிரியர் கழகத் தலைவர் ஆசிரியர் எஸ்.நிமலன் மாலை அணிவித்து வரவேற்பதை இரண்டாவது படத்திலும் ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவன் பி.நந்திகரனுக்கு பிரதம விருந்தினரின் பாரியார் கலாநிதி அனுஷியா சத்தியசீலன் தங்கப்பதக்கம் அணிவிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## யாழ்.மாவட்டத்தில் மூன்று பாடசாலைகளுக்கு முதலுதவி மற்றும் அனர்த்தம் தொடர்பான பயிற்சி

யாழ்ப்பாணம்,மார்ச்.27

யாழ். மாவட்டத்தில் முதலுதவி மற்றும் அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்புப் பெறல் தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்கென அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மூன்று பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, வல்வை சிவகுரு வித்தியாலயம், புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டன.

இப்பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர் ந. செல்வராஜின் வழிகாட்டலில் பாடசாலை அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்ட சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் இணைப்பாளர் எஸ்.செல்வரஞ்சன், உதவி இணைப்பாளர் எஸ்.ஈழநேசன் ஆகியோர் இதற்கான செயலமர்வை நடத்தினர்.

இப்பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் ஏற்கனவே கொழும்புக்கு அழைக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (203)

## கோப்பாய்க் கோட்ட அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

கோப்பாய் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் திட்டமிட்டபடி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு இடம் பெறும் என்று கோட்டக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார். (203)

## சைக்கிள்களுக்கு உரிமம்

யாழ்ப்பாணம், மார்ச்27

யாழ்.மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட சைக்கிள்களின் சொந்தக்காரர்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் இந்த ஆண்டுக்கான உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு மாநகரசபைச் செயலாளர் இ.இரத்தினசிங்கம் தெரிவித்துள்ளார். (203-111)

## இடம்பெயர்ந்து தென்மராட்சியில் தங்கியுள்ள 377 குடும்பங்களுக்கு உணவு அல்லாத பொருள்கள்

யாழ்ப்பாணம், மார்ச்27

கடந்த 2006ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு உணவு அல்லாத பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தினரும் சோஆ நிறுவனத்தினரும் இணைந்து பொருள்களை சாவகச்சேரி சிவன் கோயிலுக்கு அருகில் உள்ள தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் வைத்து நேற்றுமுன்தினம் விநியோகித்தனர்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தினர் பாய், சவர்க்கார வகைகள், படுக்கை விரிப்புக்கள், துவாய்கள் ஆகியவையும் சோஆ நிறுவனத்தினர் குடும்பத்திற்கு ஒரு நுளம்பு வலையினையும் வழங்கினர்.

பிரதேசத்தைச் சேர்ந்த 20 கிராம அலுவலர் பிரிவுகளில் தங்கியுள்ள 377 குடும்பங்களுக்கு இப்பொருள்கள் வழங்கப்பட்டன. (203-207)

## பருத்தித்துறை வைத்தியசாலையில் முதியவர்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு பணிப்பாளர் அறிவுறுத்து

பருத்தித்துறை,மார்ச்27

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் முதியவர்களுக்கு - முதியோர் அடையாள அட்டை - வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் மாவட்ட வைத்திய அதிகாரிக்குப் பணித்துள்ளார்.

சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் அடையாள அட்டை வைத்திருக்கும் முதியோர்களுக்கு வெளிநோயாளர் பிரிவு, கிளினிக்குகள், மருந்தகம் போன்ற இடங்களில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும். மருந்தகத்தில் முதியோர்களுக்கு தனியான வரிசை ஏற்படுத்தப்படல் வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வைத்தியசாலைக்கு முதியோர் அடையாள அட்டையுடன் வரும் முதியவர்கள் புறக்கணிக்கப்படுவதாக இளைப்பாறிய கிராம சேவை அலுவலர் ஒருவர் பருத்தித்துறைப் பிரதேச செயலருக்கு முறைப்பாடு செய்திருந்தார். பிரதேச செயலர் இது குறித்து யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருந்தார்.

சமூக சேவைகள் அமைச்சினால் 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது. தேவை நாடிவரும் முதியவர்கள் முன்னுரிமை அடிப்படையில் சேவைகளைப் பெற வசதியாகவே இந்த முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்படுகிறது.

முதியோர் அடையாள அட்டையை வைத்திருப்போர் சுகாதார சேவைகள் போக்குவரத்து வசதிகள், தபாலும் ஓய்வூதியம், வங்கிச் சேவைகள், பொலிஸ் நீதி ஆலோசனைகள், அலுவலக அலுவல்கள் ஆகியவற்றில் முன்னுரிமை பெற உரித்துடையவர்கள் என சமூக சேவைகள் அமைச்சு அறிவித்திருக்கிறது. இதற்கமைய சேவை பெறவரும் முதியவர்கள் சௌகரியமான முன்னுரிமை பெற்றுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்தே யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் உடனடி நடவடிக்கையை மேற்கொண்டு வைத்திய அதிகாரிக்கு மேற்படி அறிவுறுத்தலை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-218)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## மகளிர் தின நிகழ்வு

கரவெட்டி,மார்ச்27

ஊற்று நிறுவன தொழிற்பயிற்சியாளர்களால் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வடமராட்சி மகளிர் மத்திய வித்தியாலயத்தில் மகளிர் தின நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

வித்தியாலய உப அதிபர் திருமதி மகேந்திரராணி இளங்கோ தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மகேந்திரராணி நடராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203-70)

## தர்மாசிரியர் பரீட்சை வழிகாட்டிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச்27

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கான கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

மாவட்ட இணைப்பாளர் க.தேவேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் பு.ஸ்ரீந்திரன், சைவப்புலவர் பாலசண்முகன், ஆசிரியர் சி.பத்மராஜா, சைவப்புலவர் நித்தியதசீதரன், சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் ஆகியோர் விரிவுரைகளை வழங்கவுள்ளனர்.

அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த தர்மாசிரியர்கள், பரீட்சைக்கு விண்ணப்பித்த ஆசிரியர்கள், பரீட்சைக்கு விண்ணப்பிக்கவுள்ளோர் ஆகியோரை இதில் கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

## பல்கலை. புறநிலை அலகின் சுகவாழ்வு விரிவுரைத் தொடர்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் சுகவாழ்வு என்னும் தலைப்பிலான பொது விரிவுரைத் தொடர் நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலைப் புற்றுநோய் மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி என்.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலைப் பொது மருத்துவ வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எ[illegible] சிவன்சுதன், 'சலரோகத்தில் இருந்து எம்மைக் காத்துக் கொள்வது எப்படி' எனும் தலைப்பில் விரிவுரையாற்றவுள்ளார். (203)

## கல்வியிலும் பொருளாதாரத்திலும் உயர்ந்துள்ள எமது சமூகம் பண்பு நிலையில் உயரவில்லை

### கவலை தெரிவிக்கிறார் ஆறு. திருமுருகன்



யாழ்ப்பாணம்,மார்ச்27

எமது சமூகம் கல்வியாலும் பொருளாதாரத்தாலும் வளர்ந்துள்ளது. எனினும் பண்பு நிலையில் கீழ் நிலையிலேயே உள்ளது.

- இவ்வாறு கவலை வெளியிட்டார் ஆறு. திருமுருகன்.

பெரியார் கந்தையா குமாரசுவாமியின் சமூகப் பணியைப் பாராட்டும் விழா அண்மையில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே ஆறு. திருமுருகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் கூறிய தாவது:-

எமது சமூகம் கல்வியாலும் பொருளாதாரத்தாலும் வளர்ந்திருக்கிறது. எனினும் பண்பு நிலையில் கீழ் நிலையில் இருப்பதை அவதானிக்கலாம். முதியோரை மதிப்பது, சிறுவர் நலன்களைப் பேணும் பண்புகள் சமூகத்தில் குறைவடைந்துள்ளன. இந்நிலையை போக் வதற்கு கற்றவர்கள் முன்வரவேண்டும்.

தான் வாழ்ந்த பிரதேசத்தைப் பற்றி முழுவதும் தெரிந்த ஒரு வரலாற்றுப் பெட்டகமாக பெரியார் குமாரசாமி திகழ்ந்தார். அவர் மகிழ்ச்சிகரமான ஒரு மனிதர், மனித நேயப் பண்பு மிக்கவர், அன்பினால் உயர்ந்தவர். பாரதி கூறிய "நீதி உயர்ந்த மதி கல்வி அன்பு மிகவுயர்ந்தவர்கள் மேலோர்" எனும் கூற்றுக்கு ஏற்ப பெரியாராகத் திகழ்ந்தவர்.

அத்தகைய பெரியாரை பாராட்டி கௌரவிக்கும் ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் இச்செயல் பாராட்டுக்குரியது. சனசமூக நிலையத்தினர் தமது இப்பணியின் மூலம் சமூகத்தில் மற்றவர்களுக்கு முன்னோடிகளாக விளங்குவதுடன் சமூகப் பணிபுரியும் பலரையும் ஊக்குவிக்கும் செயலாக விளங்குகின்றது.

உலகளாவிய முதியோர் கௌரவிப்பு எனும் நோக்கத்திற்காக எமது சமூகத்திலும் முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டாலும் அதன் மூலம் முதியவர்கள் உரிய அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதில்லை என்பது கவலை தரும் விடயமாகும். அதனால் எமது சமூகத்தில் கற்றவர்கள் முதியோரை உரியமுறையில் கனம் பண்ணுவதன் மூலம் சிறந்த பண்புகள் வளர உதவ முடியும் -என்றார்.

இவ்விழாவிலே பாராட்டுரை வழங்கிய யாழ். செயலக புனர்வாழ்வுத் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் தமதுரையில் சனசமூக நிலையங்களின் பணிகள் அவ்வப் பிரதேச மக்களுக்கு அவசியமாகும். அவ்வகையிலே நல்லூர் முருகன் சனசமூக நிலையம் தனது பிரதேசத்தில் ஓர் எடுத்துக்காட்டான சனசமூக நிலையமாக விளங்கு கிறது. இந் நிலையத் தின் உப தலைவராக தனது எண்பதாவது வயதிலும் பணியாற் றும் பெரியார் கந்தையா குமாரசாமி பல நற் பண்புகள் நிறைந்தவர். அதனால் சமூகத் திலே எல்லோராலும் பாராட்டப்படும் ஒரு நல்ல நிலையை அடைந்துள்ளார் - என் றார்.

நிகழ்வில் யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ உரையாற்றும்போது வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சிறப்படைந்த பெரியார் கந்தையா குமாரசாமி கோபம், பதற்றம் இன்றி பணியாற்றியவர். ஆலய வழிபாட்டில் ஈடுபாடும் எல்லோருடனும் ஒன்றிணைந்து பணியாற்றும் பண்பும நிறைந்தவர். அதனால் தனது தனிப்பட்ட வாழ்வில் நிறைவு கண்டவர். இன்று சமூகப் பணியால் பாராட்டுப் பெறுகின்றார் - என்று கூறினார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ந.சோமசுந்தரமத் தலைமையில் நடைபெற்ற இப்பாராட்டு விழா நிகழ்வில் மேலும் பலர் உரையாற்றினர். (202-207)





தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளை நாடளாவிய ரீதியில் கணணி வலைப் பின்னலுடன் இணைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

வங்கி கணணி வலைப்பின்னலுடன் இணைக்கப்பட்ட பின்னர் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிறேம்சங்கர் வைப்புப்பணம் செலுத்துவதை முதலாவது படத்திலும் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் உரையாற்றுவதையும், மாவட்ட நீதிபதி அ.பிறேமசங்கர், வங்கி முகாமையாளர் சி.தணீந்திரன், யாழ்.கிளை முகாமையாளர் வீ.அருளானந்தம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் இரண்டாவது படத்திலும் காணலாம். (207)

## கண்ணீர் அஞ்சலி

### வண.டி.ஆர்.அம்பலவாணர்

(இளைப்பாறிய ஊழியர் - JDCSI , சிரேஷ்ட விரிவுரையாளர் - CTS)



*23.03.2008 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய ஆசானும் அருட்தந்தையுமாகிய வண.டி.ஆர்.அம்பலவாணர் அவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்கி, அவர்களுடைய குடும்பத்தினருக்கும் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

**உடன் ஊழியர்கள்,**
**அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபை**

(72461)

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

### Postponement of Interview - Faculty of Arts

The Interviews scheduled for 27th and 28th March 2008 for the post of Lecturer (Probationary)/Assistant Lecturer (On Contract)/Instructors (On Contract) at the University of Jaffna have been postponed as follows due to unavoidable circumstances.

| Scheduled dates | New Dates |
|---|---|
| 27.03.2008 | 03.04.2008 |
| 28.03.2008 | 04.04.2008 |

The above interviews will be held on the new dates on the scheduled time which was already informed.

**2008.03.26** (C/551998) **Registrar.**


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

971 நீலம்

வெற்றி இலக்கங்கள்

தனுசு

**01 09 14 53**

**25-03-2008**

செல்லுபடியாகும் தொடர் இல. 4705405 - 4720822

ஜக்பொட் பரிசு ரூபா.3,024,500/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 339,181 | 10/- | 3,391,810/- |
| 2 இலக்கங்கள் | 31,196 | 20/- | 623,920/- |
| 1 இல. + லக்கினம் | 30,872 | 30/- | 926,160/- |
| 2 இல. + லக்கினம் | 2,815 | 100/- | 281,500/- |
| 3 இலக்கங்கள் | 823 | 500/- | 411,500/- |
| 3 இல. + லக்கினம் | 84 | 5,000/- | 420,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 3,024,500/- | 3,024,500/- |
| மொத்தம் | | | 9,479,390/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 404,981 | | 10,502,890/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 5596656 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 மார்ச் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| காலி | 4713969-0-02 |
| மட்டக்களப்பு | 4720476-6-33 |
| மாத்தளை | 4712643-2-34 |
| பொலன்னறுவை | 4707202-0-60 |
| அனுராதபுரம் | 4713227-2-43 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## சார மரம் முறிந்து கீழே விழுந்தவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

கட்டடம் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர் சார மரம் முறிந்து கீழே விழுந்த போது கட்டப்பட்ட ஒரு பகுதி கட்டடமும் சரிந்து வீழ்ந்ததில் அவரின் இடுப்புப் பகுதியில் காயம் ஏற்பட்டது.

இச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை மட்டுவிலில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த மாணிக்கவாசகம் (வயது-68) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

(203- 207)

## மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரிக்கு 3 மாணவர் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 27

மட்டக்களப்பு தேசியக் கல்வியியல் கல்லூரிக்கு காத்திருப்போர் பட்டியலில் இருந்து யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சங்கீதக் கற்கை நெறிக்கு கே.சித்திரா (சுழிபுரம் கிழக்கு), ரி.யசோபாரதி (நாவற்குழி கிழக்கு) ஆகியோரும்-

நாடகமும் அரங்கியலும் கற்கை நெறிக்கு பி.செந்தூர்செல்வனும் (நெடுந்தீவு) தெரிவு செய்யப்பட்டுள்னர்.

இம் மாணவர்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பீடாதிபதி கே.பாக்கியராஜா கேட்டள்ளார்.

(202)

## வடமராட்சியில் கோதுமை மா விநியோகம்

வடமராட்சி,மார்ச்27

வடமராட்சிப் பகுதியில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பங்கீட்டுக்கு 2 கிலோ கோதுமை மா வழங்கப்பட்டு வருகின்றது.

'உ' அட்டை வைத்திருப்போருக்கே இது வழங்கப்பட்டு வருகிறது.

(203-236)

## சாவகச்சேரி முத்துமாரி ஆலயத்தில் பாற்கரக அபிஷேகம்

யாழ்ப்பாணம்,மார்ச்27

சாவகச்சேரி வாரிவனம் முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் மூன்றாவது பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தையொட்டி 108 பாற்கரக அபிஷேகம் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்த அபிஷேகம் நடைபெறவுள்ளது.

பாற்கரக அபிஷேகத்தில் பங்கு பற்ற விரும்பும் அடியார்கள் ஆலய ஆதீனக் குருக்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(202-207)


## மில் விற்பனைக்கு

உடுப்பிட்டி றோட், தொண்டைமானாறு (பருத். ப.நோ.கூ.சங்கக் கிளை - 14 அருகில்) என்னும் முகவரியில் ஆலை உபகரணங்கள், மோட்டர் என்பவற்றுடன் கூடிய மில் (அரைவு ஆலை) விற்பனைக்குண்டு வாங்க விரும்புவோர் மேற்காணும் முகவரியுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

T.P.077 4927432 (72460)

## காணி விற்பனைக்கு

31, வளாக வீதி, திருநெல்வேலி தெற்கு என்னும் முகவரியில் குழாய்க்கிணற்றுடன் கூடிய ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

*தொடர்பு:* 021 222 7556

*37, வளாக வீதி,*
*திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.*

காணிச் சொந்தக்காரர் பெயர் - செல்வி ச.துஷ்யந்தினி (72457)


## கண்ணீர் அஞ்சலி



புங்குடுதீவு தென்னிந்திய திருச்சபையின் பொறுப்பாளரும் புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை அபிவிருத்தி சங்க உப தலைவருமாகிய **இராஜநிமலன் அம்பலவாணரின்** தந்தையார்

**அருட் திரு டானியல்**

### இராஜரெட்ணம் அம்பலவாணர்

அவர்கள் 23.03.2008 ஞாயிற்றுக்கிழமை காலமாகியதையிட்டு புங்குடுதீவு மக்கள் பெரும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*முதலாம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.*

**கை. ஸ்ரீஸ்காந்தன்**
அம்பாள் களஞ்சியம், புங்குடுதீவு.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வேதரத்தினம் கெங்காதரம்



தொல்புரம், வழக்கம்பரையைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய திருமதி வேதரத்தினம் கெங்காதரம் அவர்கள் 26.03.2008 புதன்கிழமை லண்டனில் காலமாகி விட்டார்.


அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதி கெங்காதரம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியப்பா - அன்னபூரணம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் முத்துக்குமாரசாமி (அப்பர், வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்), காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் நாகரத்தினம் (அம்மம்மா அன்ரி), சுந்தரராஜா (சுந்தரம், வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்), இராசரத்தினம் (இராசாத்தி Canada), லோகநாயகி (சந்திரா France) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கிருபானந்தன், பரமேஸ்வரன் (U.K), கனகராசா (U.K), தயாநிதி (பவ), Lion காண்டீபன் (Swasthi Communication & Swasthikai Tex), உமாசுதன் (U.K), இராமநிதி (U.K), வேதகெங்கா (வாணி - Colombo), நந்தினி (France) ஆகியோரின் பாசமிகு தாயும் சோமசேகரம் (அதிபர், கொட்டடி நமசிவாய வித்.), சுபத்திராதேவி, மனோன்மணி (U.K), உமாதேவி (U.K), ஜெயகௌரி, ராஜி (U.K), கலைவாணி (U.K), தியாகராஜன் (Lakehouse), மணிபல்லவன் (France) ஆகியோரின் பாசமிகு மாமியும் துஸ்யந்தி (BH Pointpedro), Eng.ரவிச்சந்திரன் (U.K), கோபாலரட்ணா (Q.S.Colombo), றூபா (U.K), கெங்காரூபன் (U.K), Dr.லக்ஷ்மன் (U.K), ஜெனனி (U.K), துவாரகன் (U.K), கஜானி (U.K), பானுசாய் (CGC), சுபாங்கன் (SJC), பிரகாசிகா (CGC), பிரியங்கரி (CGC), வானதி (HLC), தர்ஷன் (U.K), பிரியந்தன் (U.K), காயத்திரி (U.K), கஸ்தூரி (U.K), கஜேந்திரன் (வ/ கல்மடுக்குளம் GTMS), கலீபன் (HNDM), மதுகரன் (KHC), சாயிபிரசாந்தி (சைவமங்கையர் கழகம்), சாயி பிரசன்னா (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), சாயிதன்யா (France), காருண்யா (France), அட்சயா (France) தயான் (R.D.A, Pointpedro), Eng.ஸ்ரீபாலமயூரன் (U.K) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**கெ.கிருபானந்தன்** **பிள்ளைகள்.**
*டச்சு வீதி,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.*
*தொ.இல : 021 222 9569.* (72459)

### திருமதி வல்லிபுரம் மனோன்மணி



யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு, நந்தாவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மனோன்மணி 24.03.2008 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்க ளான சரவணமுத்து - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும் நாகரட்ணம், லக்சுமி, கந்தையா, இரட்ணசிங்கம், பூபாலசிங்கம், இராசப்பா ஆகியோரின் சகோதரியும், சறோஜினிதேவி, மனோரஞ்சிதம், சண்முகலிங்கம், வசந்தினி, சந்திரகுமார், நந்தகுமார், நந்தினி, சியாமளா ஆகியேரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2008) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கொழும்பு கல்கிசை மகிந்த மலர்சாலையில் நடைபெற்று பூதவுடல் மாலை 5 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*27/114, பரக்கும்பா பிளேஸ்,*
*வெள்ளவத்தை.*
T.P.*077 9801321*
*077 4803420* (சி/551970)

தகவல்:
**சறோஜினிதேவி(மகள்)**
**பரமேஸ்வரன்(மருமகன்)**


# கட்டட வசதியின்மை, தளபாடப் பற்றாக்குறை ஆகியவற்றால் சிரமங்களை எதிர்கொள்ளும் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய மாணவர்கள்



பாடசாலை அதிபர்
**மாணிக்கம் ஆனந்தகுமார்**

1817ஆம் ஆண்டு அமெரிக்கன் மிஷனறியினரால் ஆரம்பிக்கப்பட்ட மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் இன்று 176ஆவது ஆண்டில் தனது கல்விப்பணியைத் தொடர்கின்றது.

பாடசாலையை மிஷனறியினர் ஆரம்பித்தவேளையில் பல தடவைகள் அது தீயிட்டு அழிக்கப்பட்டது. இதனைச் சரி செய்துகொண்டு இப்பகுதியில் உள்ளவர்



களை ஆசிரியர்களாக நியமித்து இப்பாடசாலை இயங்கி வந்தது.

1961ஆம் ஆண்டு அரசாங்கம் மிஷனறிப் பாடசாலைகள் உட்பட ஏனைய தனியார் பாடசாலைகளையும் கையேற்றபோது இப்பாடசாலையும் கையேற்கப்பட்டுப் பின்னர் மல்லாகம் மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவுப் பாடசாலையாக இயங்கியது. அப்போது இப்பாடசாலை மல்லாகம் அமெரிக்கன் மிஷன் பாடசாலை என்ற பெயருடனேயே இயங்கிவந்தது.

தொடர்ந்து 1979ஆம் ஆண்டு ஆரம்பப் பாடசாலைகளின் அபிவிருத்தியைக் கருத்தில்கொண்டு காங்கேசன்துறை கல்வி வலயத்தில் யூனியன் கல்லூரி, நடேஸ்வராக் கல்லூரி, மல்லாகம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் இருந்த ஆரம்பப் பாடசாலைகள் பிரிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இப்பாடசாலை மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் என்ற பெயருடன் இயங்கத் தொடங்கியது. படிப் படியாக உயர்ந்த இப்பாடசாலையில் 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வதற்கு முன்னர் 590 மாணவர்கள் இங்கு கல்வி பயின்றனர்.

இடப்பெயர்வைத் தொடர்ந்து 1996ஆம் ஆண்டு மீண்டும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் 10 மாணவர்களுடன் இயங்கிய இப்பாடசாலை பின்னர் மீண்டும் தனது சொந்த இடத்தில் 230 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது.

தற்போது இப்பாடசாலையில் நிரந்தர ஆசிரியர்களாக 12 பேர் உள்ளார்கள். இவர்களை விட நாட்டுச் சூழல் காரணமாகத் தற்காலிக இணைப்புப் பெற்ற 3 ஆசிரியர்களும் ஒரு ஆசிரிய நூலகரும் இங்கு கடமையாற்றுகின்றனர்.

பாடசாலை அதிபர் மாணிக்கம் ஆனந்தகுமார் தெரிவித்ததாவது:-

தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புகளைக் கொண்டுள்ள இப்பாடசாலை தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் இரண்டு பிரிவுகளைக் கொண்ட ஒரு பாடசாலையாக இயங்கி வருகின்றது.

பாடசாலையில் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற போதிலும் தளபாடப் பற்றாக்குறை கட்டட வசதியீனங்கள் என்பவற்றால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. பாடசாலை 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வின்போது தளபாடங்களை முழுமையாக இழந்துள்ளது. மீண் டும் ஏனைய பாடசாலைகளில் இருந்து சேகரிக்கப்பட்ட தளபாடங்களைக் கொண்டே வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன- என்கிறார் அதிபர்.

மாணவர்களில் கல்விச் செயற்பாடுகளுக்குத் தேவையான தளபாட வசதிகள் இங்கு




இல்லை. அத்துடன் கட்டட வசதிகளும் போதியதாக இல்லை.

இடப்பெயர்வைத் தொடர்ந்து 'யூனிசெப்' நிறுவனம் ஒரு கட்டடத்தை வகுப்பறையாக மாற்றி அமைக்க உதவி செய்தது. இதேபோன்று தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம் ஆரம்பப் பாடசாலைகளில் பிள்ளைநேயப் பாடசாலையாக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் இப்பாடசாலை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் பாடசாலையின் அடிப்படைத் தேவைகளை சிறுவர் பாதுகாப்பு நிதியம் பூர்த்திசெய்து வருகின்றது. உள்ள வகுப்பறைகள் நன்கு திருத்தியமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டுள்ளன.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஆரம்பிக்கப் பட்ட காலம் முதல் ஆகக்கூடியது நான்கு மாணவர்கள் சித்தியடந்து வந்துள்ளார்கள். இம்முறை முதல் தடவையாக 06 மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்துள்ளார்கள்.

தனக்கு கிடைத்த வளத்தை நல்ல முறையில் பயன்படுத்தும் திறமையும் ஆற்றலும் கொண்டவராக அதிபர் காணப்படுகின்றார். பாடசாலையின் நூலக ஆசிரியராகக் கடமையாற்றுபவர் கணனி அறிவு கொண்டவராக இருப்பதனால் கணனியைப் பயன்படுத்தி மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு கற்றல் வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. அத்துடன் பட்டதாரி ஆசிரியர் ஒரு

## பாடசாலைக்கு மாணவர்களை அனுப்புவதில் பெற்றோர் அதிக அக்கறை காட்டவேண்டும்

வர் சிங்கள மொழியில் தேர்ச்சியடைந்துள்ளமையால் அவர் தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புகளுக்கு சிங்கள மொழியைக் கற்பித்து வருகின்றார்.

2006ஆம் ஆண்டு முதல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. 2006ஆம் ஆண்டு 5 பேரும், 2007 ஆம் ஆண்டு 6 பேரும் சித்தி அடைந்துள்ளார்கள்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடந்தோரின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதற்கு பாடசாலை விடுமுறை நாள்களிலும் பாடசாலை முடிவடைந்த பின்னரும் விசேட வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசித்து வரும் குடும்பங்களின் பிள்ளைகளும், அயலில் உள்ள பிள்ளைகளுமே இங்கு கல்வி கற்கின்றார்கள்.

பாடசாலைக்கு விசேட வகுப்புகளுக்கும் தரம் 5 மாணவர்களைப் பெற்றோர் ஒழுங்காக அனுப்பாமையால் புலமைப் பரிசில் பரீட்சையில் மேலும் முன்னேற்றத்தை எட்டுவது சிரமமாக உள்ளதாக அதிபர் குறைபட்டுக் கொள்கின்றார்.

இங்கு கற்கும் மாணவர்களில் 90 வீதமானோர் வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளாக உள்ளனர். பெற்றோரின் வருமானம் பிள்ளைகளின் கல்வித் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடியதாக இல்லை. இப்பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டுக்கு நிறுவனங்களின் உதவி அவசியமாகின்றது.

இந்த ஆண்டு பாடசாலையில் தரம் ஒன்றுக்கு 48 பேர் அனுமதி பெற்றுள்ளார்கள். இப்பாடசாலையுடன் இணைந்து பல வருடங்களாக முன்பள்ளியொன்றும் இயங்கிக் கொண்டு வருகின்றது. இந்த முன்பள்ளியில் இந்த ஆண்டு 50 பேர் கல்வி கற்கின்றார்கள்.

2006ஆம் ஆண்டு பாடசாலையின் கட்டடத் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக வலிகாமம் கல்வி வலயத்தினால் இருமாடிக் கட்டடத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் நாட்டுச் சூழ்நிலை காரணமாக அதற்கான காணியைப் பெறமுடியாமல் போனதால் நிதி திரும்பிச் சென்றுள்ளது.

பாடசாலையில் காணப்பட்ட இடநெருக்கடியை போக்கும் முகமாக தற்போதைய அதிபர் தனது உறவினர் ஒருவரின் காணியின் ஒரு பகுதியைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளார். இதேபோன்று பழைய மாணவனான விக்னராஜாவும் ஒரு காணியைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளார். அத்துடன் அவர் ஆங்கிலக் கல்வியை பாடசாலை மட்டத்தில் அபிவிருத்திச் செய்யும்முகமாக மாதாந்தம் பணம் செலுத்தி ஆங்கில ஆசிரியை ஒருவரையும் ஏற்பாடு செய்துள்ளார்.

மாணவர்களின் குடிதண்ணீர் வசதிக்கு சிவத்தமிழ்ச்செல்வி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நீர்தாங்கியை அமைத்துக் கொடுத்துள்ளதுடன் வருடாந்த பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி ஆகியவற்றுக்குப் பண உதவியும் புரிந்து பாடசாலையின் அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றார்.

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் மாணவர்களும் இப்பாடசாலையிலேயே கல்வி கற்று வருகின்றார்கள்.

கோட்டக்கல்வி அலுவலகம், வலயக் கல்வித் திணைக்களம் என்பனவும் பாடசாலைக்கான தேவைகளை இனங்கண்டு உதவி செய்து வருகின்றன. கட்டட வசதியை ஏற்படுத்துவதற்கும் உதவி செய்வதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாணவர்கள் தமிழ்த்தினப்போட்டிகள், ஆங்கிலத் தினப் போட்டிகளில் தமது திறமையை வெளிப்படுத்தி வருகின்றார்கள். இதேபோன்று விளையாட்டுப் போட்டியில் மாகாண மட்டம்வரை தெரிவுசெய்யப்பட்ட போதிலும் நாட்டு சூழ்நிலையினால் மாகாண மட்டப் போட்டிக்குச் செல்லமுடியவில்லை.

175ஆவது ஆண்டையொட்டி பாடசாலை வரலாற்றை உள்ளடக்கிய நூலொன்று முதற் தடவையாக வெளியிடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**- பவித்திரன் -**

# பண்பட்ட மானுடவியல் பூங்காக்களாக பாடசாலைகளை மாற்றுவது எவ்வாறு?

மனித வாழ்வியலில் மகிழ்வை நுகர்ந்திட சரியான வழி மற்றவர்களுக்கு மகிழ்வை அளிப்பதுதான். இதற்கு ஏற்ப பாடசாலை நோக்கி வரும் மாணவர்களைப் பண்பட்டவர்களாக்கி மகிழ்ச்சிகரமான கற்றலுக்கான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுப்பவர்கள் ஆசிரியர்களும் அதிபர்களுமே. இவர்கள் மாணவர்களை மகிழ்ச்சிகரமாகக் கற்பிக்கவேண்டுமெனில் இவர்கள் முதலில் மகிழ்ச்சிகரமான - பண்பட்ட பாடசாலை வேலைச் சூழலை அமைத்துக்கொள்ள வேண்டும். இதற்கே இன்று நவீன மனித வள கல்வி முகாமைத்துவம் வழிகாட்டுகின்றது.

நாட்டின் ஒவ்வொரு பிள்ளையும் தான் சார்ந்த குடும்பச் சூழலுக்கு வெளியே கல்வியைப் பெறுவதற்கான அடிப்படை நிறுவனம் பாடசாலையாகும். பொதுக் கல்வியமைப்பில் பாடசாலைகளே முதன்மை இடத்தை வகிக்கின்றன. நாட்டிற்கும் சமூகத்திற்கும் சுமையாகாத நாட்டின் அபிவிருத்திக்கும், மண் பற்றிற்கும் பங்களிப்பை நல்கக் கூடிய அதேசமயம் ஆளுமையுடைய பிரஜைகளை அளிக்கவேண்டியவையும் பாடசாலைகளேயாகும்.

எனினும் தற்போதைய பாடசாலைகள் மேற்குறிப்பிட்ட மகத்தான பணிகளை ஆற்றுவதில் சோர்வுற்றிருப்பதை பல்வேறு ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த நிலைமைகளில் இருந்த பாடசாலைகளை விடுவித்து புத்துயிர் ஊட்டும் சக்தி அதிபர் ஆசிரியர்களிடமே உள்ளது. இத்துறை சார்ந்த சுயாதீன விருத்தியை ஏற்படுத்த அரசாங்கம் பாடசாலை ஆதார முகாமைத்துவ செயற்திட்டத்தை (School Based Management) நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது. இதில் வினைத்திறனுடைய பாடசாலை என்ற எண்ணக் கரு முக்கியம் பெறுகின்றது.

### வினைத்திறனுடைய பாடசாலைகள்

பாடசாலைச் செயலாற்றுகை முகாமைத்துவத்தின் விளைவே வினைத்திறனுடைய (Efficiency) பாடசாலைகளின் வெளியீடாக உள்ளன. இதற்குப் பாடசாலைகளின் முதற்தர முகாமையாளர்களான அதிபர்களே முதற்பங்கை வகிக்கின்றனர். அவர்கள் அறிவியல்சார் கல்வி முகாமை, கோட்பாடுசார் முகாமை, மானுடவியல் நடத்தைசார் முகாமை, தந்திரோபாய முகாமை, நிகழ்வு, சந்தர்ப்பவாத முகாமை, சூழ்நிலை - நெருக்கடி சார்ந்த முகாமைதுவ இயல்புகளை - நுட்பங்களைச் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பின்பற்ற வேண்டியிருக்கின்றது. இதனூடாக வினைத்திறனுடைய பாடசாலைகளை ஏற்படுத்தலாம். அவற்றின் பண்புகள்:

* பாடசாலையில் மகிழ்ச்சிகரமான கற்றல், கற்பித்தல், கலைத்திட்ட செயன்முறைகள் முழுமையாகப் பின்பற்றப்படும்.
* அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம் ஆகியன சமூகத்துடன் சுமுகமான உறவு நிலவும்.
* இருக்கின்ற வளங்களைக் கொண்டு உச்சப் பயன்பாட்டைப் பெறுதல்.
* சிறந்த தேர்ச்சிகளை மாணவர் பெறுகின்றமை, பாடசாலைக்கு விரும்பி வருகின்றமை.

**திரு.பா.தனபாலன்**
உபபீடாதிபதி (கல்வி)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

* மாணவர்களது பாடசாலை வரவு உயர்வாகவும் இடைவிலகல் குறைவாகவும் அதிபர்-ஆசிரியர் லீவு பெறல் குறைவாகவும் காணப்படல்.
* அதிபர் - ஆசிரியர் அர்ப்பணிப்பாகச் செயலாற்றுவதுடன் நூலகம், கணனிக் கூடம், கற்றல் உபகரணங்கள், விளையாட்டு மைதானம் காணப்படுகின்றமை.
* பண்பட்ட சமயநெறியைப் பின்பற்றல், சிறந்த வகுப்பறைக் கவின்நிலை.

இவ்வகையில் மேற்குறித்த எல்லா இயல்புகளையும் கொண்ட வினைத்திறனான பாடசாலைகள் இல்லை என்ற விமர்சனங்கள் பரவலாக உள்ளன. ஆயினும் இப்பண்புகளை ஏற்படுத்தும் முயற்சிகளும் வழிகாட்டல்களும் அவசியமாக வேண்டப்படுகின்றன. பாடசாலையின் முதற்தர முகாமையாளர்களான அதிபர்களின் முகாமைத்துவ ஆற்றல்களும் ஆளுமையும் அர்ப்பணிப்பும் வினைத்திறனான பாடசாலைகளின் ஆதாரங்களாக உள்ளன. இங்கு வினைத்திறன் என்பது ஒரு பாடசாலையின் வளங்களை உச்சப் பயன் தரும் வகையில் சிக்கனமாகப் பயன்படுத்துவதைக் குறிக்கின்றது. இது உள்ளீடுகளான (Input) வளங்களுடன் தொடர்புடையது. மேலும் வினைத்திறன் பொருந்திய பாடசாலையின் வெளியீடுகள் (Output) சாதனை மட்டத்தை ஏற்படுத்துமாயின் அதனை வினைத்திறன் அல்லது பயனுறுதி (Effectiveness) என்பர்.

### அதிபர் என்ற முகாமையாளர்

இன்றைய நவீன சமூகச் சூழலில் பாடசாலை அதிபர்கள் பல சவால்களை எதிர்நோக்குகின்றனர். முன்னைய கால அதிபர்கள் இவ்வாறாக இருந்தனர். அதன் படி அல்லது அவர்களைப் போல இருக்க முடியாதா என்ற இலட்சியவாத சிந்தனையை இன்றைய நிலையில் ஏற்றுக்கொள்ள முடியாது. அன்றைய காலச்சூழ்நிலைகள் வேறு. இன்றைய காலச்சூழ்நிலைகள் வேறு. இன்று மிக விரிவான சமூக நெருக்கடிகளோடும் சமூக உறவுகளோடும் தாக்கங்களினூடும் இணைந்த கல்வி முகாமைத்துவம் சார்ந்த செயல்நெறிகள் (Trends in Edu- cational Management) பிரயோகிக்கப்படுகின்றன.

(தொடரும்.......)

# மனித வாழ்வில் மௌன வலிகளை ஊமம் என்ற வடிவத்தில் வெளிக்கொணரும் சிறப்பு

ஈழத்து அரங்க வரலாறு பலராலும் சேர்ந்து உருவாக்கப்பட்டுள்ளது. அரங்கு ஒரு கல்வியாக ஈழத்தில் வந்தமை ஆற்றுகை வடிவங்களை புதிய முறையில் வெளிப்படுத்தவும் அதே வேளை சமூக அக்கறை பொருந்தியதாய் மாறவும் வழி வகுத்தது. அரங்கின் நேரடித் தொடர்பு கொள்ளும் உயிர்ப்பு இருக்கும் வரை அது தொடர்ந்திருக்கும்.

இன்று உலக நாடக தினமாகும். இது 1961 ஆனி மாதத்தில் சர்வதேச அரங்க அமைப்பின் ஒன்பதாவது ஒன்று கூடலாக "கெல்சிங்கி" "வியன்னா" ஆகிய இடங்களில் சர்வதேச அரங்க திட்டம் உருவமைக்கப்பட்டது.

சர்வதேச அரங்க திட்டம் எனும் சொல்லுக்கு மாற்றீடாக "அர்விகிவிமா" (Arvikivimaa) என்பவரால் "உலக நாடக தினம்" என்பது முன்மொழியப்பட்டது. எனினும் 1962 இல் பரிசில் மார்ச் 27 ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ் விழா மக்களிடையே சமாதானத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்கும் ஆற்றுகைக் கலையின் சக்தியை மக்கள் முன்னிலையில் வெளிக்கொணர்வதற்கு அரங்கக் கலைஞர்களால் கொண்டாடப்படுகிறது. இவ்விழா தனது நோக்கமாக பின்வரும் அம்சங்களினைக் கொண்டுள்ளது.

1. ஆற்றுகைக் கலையின் முக்கியத்துவத்தையும் அதன் பயில்வையும் சர்வதேச ரீதியில் பரிமாறிக் கொள்ளவும் ஊக்குவித்தல்.

2. அரங்கக் கலைஞர்களுக்கு இடையில் கூட்டுணர்வை உருவாக்குவதிலும் வளர்ப்பதிலும் ஆக்கத்திறன் மீதான அக்கறையை விருத்தி செய்தல்.

3. இக் கலைப்படைப்பு மீதான அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் விழிப்புணர்வுடன் உருவாக்குதல் .

4. இந்த நிகழ்வில் பங்கு கொள்வதன் மூலம் மக்களிடையே ஆழமான புரிந்துணர்வுக்கும் பங்கு கொள்ளலை வலுப்பெறச் செய்வதற்கும் முனைப்பூட்டுதல்.

மேலும் நடனம் போன்ற பிரத்தியேக முறைகளுக்கு முன்னுரிமை கொடுக்க

## இன்று உலக நாடக நாள்

வும் மற்றும் சர்வதேச செய்திப் பரிமாற்றம் பொது விடயங்களை கலந்து ஆலோசிப்பதற்கான பேச்சு வழக்கு முறை வட்ட மேசை மாநாடு போன்ற வேறுபட்ட முயற்சிகளுக்காக சர்வதேச விழாவாக ஒரு நாள் அல்லது ஒரு வாரம் அல்லது ஒரு மாதம் வரை இவ்விழா கொண்டாடப்படுகின்றது. இதற்கு ஜப்பான், குவைத் போன்ற நாடுகள் சான்று பகர்கின்றன.

### பல்கலைக் கழகங்களில்...

இவ் வகையில் உலகத்திலே அரங்கேறி வருகின்ற இவ்விழாவை நிகழ்த்துவதில் ஈழத்து அரங்கிலும் அக்கறை கொள்ளப்படுகிறது. இதன் ஆரம்ப முயற்சியாகக் கிழக்கு பல்கலைக்கழகம் தனக்கான கள வெளியினை சிருஷ்டித்து உலக நாடக தின விழாவினை அரங்கேற்றி வருகின்றது. அதன் நீட்சியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் "நாடகமும் அரங்கக் கலைகளும்" பகுதியினரால் கடந்த வருடம் முதற் கொண்டு "உலக நாடக தின விழா" ஆரம்பித்து நடத்தப்படுகிறது.

கலையினையும் கலைவெளிப்பாட்டு வடிவங்களினையும் அக்காலங்களும் அதன் சூழமைவுகளுமே நிர்ணயம் செய்கின்றன. இவ்வகையில் மனித வாழ்வின் மௌன வலிகளினை வெளிப்படுத்த அரங்கு தன்னளவில் பொருத்தமான வடிவத்தினை அதன் வெளிப்படுத்துகையாக ஊமம் (Mime) என்ற வடிவம் ஊடாக வெளிப்படுத்துகிறது.

அவ்வகையில் "2004:9.0", "மூடி" என்று இருவகையான ஆற்றுகை தொழிற்பாடுகளினை கடந்த வருட "உலக நாடக தினம்" தனக்குள் உள்ளடக்கியது.

இனிவரும் காலங்களில் வெவ்வேறு பகுதிகளில் இயங்கும் நாடக நிறுவனங்களில் இருந்து நாடக ஆற்றுகைகளையும் மற்றும் பாரம்பரிய அரங்க வடிவங்களையும் ஆற்றுகை செய்வதோடு அரங்கியல் சார்ந்த கருத்தரங்குகளையும் நடத்த தீர்மானித்துள்ளோம். இவை ஓர் ஆரம்பம் என்பதால் எல்லாக் கலைஞர்களையும் ஒன்றிணைத்த விழாவாக அமையவில்லை. அடுத்த வருடம் இந்தக் குறைபாடு இல்லாது விழா கொண்டாடப்படும்.

அவ்வகையில் இவ் வருடமும் பாரம்பரியத்தையும் நவீனத்தினையும் சேர்த்து ஆற்றுகைகள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. இவ் வகையில் கட்டுவன் வசந்தன் கூத்து, காத்தவராஜன் கூத்து, கனவின் நிழல் 2004:9.0, 'சாட்சி, தடுமாற்றம், மூடி' என்னும் ஆற்றுகை வடிவங்களை வெளிப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

**வெறுவெளி அரங்கக் குழு,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

### சமய சந்நிதிகளில்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து நாள்கள் இடம்பெறும் அலங்காரத் திருவிழாவில் எதிர்வரும் 6 ஆம் திகதி தேர் திருவிழாவும் மறுநாள் ஆலய பித்தர் கேணியில் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

திருவிழா நாள்களில் மகேஸ்வர பூசையும் இடம் பெறும். (203-86)


* * *

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாத சிவன் ஆலய மகா கும்பாபிஷேக பூர்த்தியையொட்டிய மண்டலாபிஷேகமும் 1008 சங்காபிஷேகமும் எதிர்வரும் நான்காம் திகதி நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் காலை 6.30 மணி தொடக்கம் சிவனடியார்களுக்கு சிவப்பிரம்மஸ்ரீ தியாக உமாசுதக்குருக்கள் சமய தீட்சை வழங்குவார். (203-207)

## நீங்காத நினைவலைகள்

| 5ஆம் ஆண்டு | 2ஆம் ஆண்டு |
|---|---|





தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை (ஸ்ரேசன் றோட்)வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் கிருஷ்ணபிள்ளை சதாசிவம் திருமதி சதாசிவம் தங்கமணி

| | | |
|---|---|---|
| 07.03.1924 | மலர்வு | 20.11.1929 |
| 06.03.2002 | உதிர்வு | 21.03.2006 |
| 31.03.2008 நவமி | திதி | 27.03.2008 ஷஷ்டி |

**மலர்ந்த முகத்துடன் மாசற்ற நெஞ்சுடன் பாசத்தின் உறைவிடமாய்**
**பார் போற்ற வாழ்ந்திர்களே! நீங்கள் இன்றில்லை எம்முடனே**
**காலங்கள் மறைந்தாலும் கவலைகள் மறையவில்லை**
**ஆண்டுகள் பல நகர்ந்தாலும் உங்கள் நினைவுகள் நீங்காது.**


*எங்கள் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து உங்கள் இருவரினதும்*
*ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ச.சிவகுமாரன், 'பாலகிரி', கல்லடி லேன், சாவகச்சேரி. (72228)

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 13 * 04 * 1936



விண்ணில் 26 * 02 * 2008

அமரர்

### முருகேசு சோமசுந்தரம் (சுந்தரம்)

(நவணிவெளி கண்ணகை அம்மன் ஆலய தர்மகர்த்தா)

அன்பின் பிறப்பிடமே பண்பின் இலக்கணமே
பாசத்தின் அற்புதமே- எம் குலக்கோயிலே!
எமை வாழ வைத்த ஒளி விளக்கே! எம் மூச்சு
உள்ளவரை- உம் நினைவு எம்மோடு கலந்திருக்கும்.

18, இளையதம்பி வீதி, அரியாலை. (72438)

**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்மகிழ 19 . 05 . 1940

மண்நெகிழ 26 . 02 . 2008

### அமரர் இளையதம்பி தம்பிராசா

(ஓய்வுபெற்ற வனபரிபாலன அதிகாரி)

மண்ணிலே உதித்து- எங்கள்
குடும்பத்தில் சூரியனைப் போல் பிரகாசித்து- எங்கள்
இதயம் என்ற கோயிலில் ஆணிவேராய் பதிந்துவிட்டு- பின்
எங்கள் நினைவுகளை எங்கே விட்டுவிட்டுச் சென்றீர்கள்.

கடந்த 26.02.2008 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவரின் சபிண்டீகரண நிகழ்வு இன்று (27.03.2008) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

100/4, பொன்னாலை வீதி, சங்கானை. (72451)

இவரின் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

## ஓராண்டு ஆனதோ!... அந்தோ!!...

திருமதி

### இராஜேஸ்வரி கருணைஆனந்தன்

கண்ணில்: 04.03.1950 நெஞ்சில்: 27.03.2007

திதி: 16.03.2008



நித்திலம்தோய் நிரைக்கடல் ஓய்வின்றி எந்நேரம்
எத்திக்கும் வந்துவந்து கரைமுத்தம் இடுவதுபோல்
நித்தம்உனை நினைந்து ஓய்வதில்லை எமது மனம்
பக்தியால் பரமனிடம் வேண்டுகின்றோம் ஆத்மசாந்தி.

(சி/551989)

உனது நினைவுடன்:

**அன்புக் கணவர், மக்கள், மருமக்கள்.**

14, A/6, DIEKMANS ROAD, COLOMBO- 04

# ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து தமிழக அரசில் தனது பதவியை ராஜினாமாச் செய்தார் டி.ராஜேந்தர்

சென்னை,மார்ச்27

தமிழக மாநில தேசிய சிறுசேமிப்பு ஆலோசனைக் குழுவின் துணைத் தலைவர் பதவியிலிருந்து இலட்சிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டி.ராஜேந்தர் இராஜினாமாச் செய்துள்ளார்.

மாநில தேசிய சேமிப்பு ஆலோனைக் குழுவின் துணைத் தலைவர் பதவியை வைத்துக்கொண்டு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகப் போராடுவது கூட்டணிக் கட்சிக்குள் குந்தகத்தை விளைவித்து விடக்கூடாது என்பதற்காகவும், தமிழக முதல்வருக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதற்காகவும் பதவியை ராஜினாமாச் செய்கிறார் என ராஜேந்தர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் அவரது இல்லத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த டி.ராஜேந்தர் கூறியவை வருமாறு:

''மாநில தேசிய சேமிப்பு ஆலோசனைக் குழுத் துணைத் தலைவர் பதவியிலிருக்கும் நான், தமிழக முதலமைச்சருக்கு என் நிலைப்பாடு குறித்து ஒரு கடிதம் எழுதி யுள்ளேன். அந்தக் கடிதத்தில் நான் குறிப்பிட்டுள்ளவற்றை உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

''இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். இவ்விடயத்தில் இலங்கை அரசை எச்சரிக்கவேண்டியது இந்திய அரசின் தலையாய கடமை. ஆனால், இலங்கை அரசு அங்கு வாழும் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு இந்தியாவே உதவி செய்து வருவது வருத்தத்தை வரவழைக்கிறது. இலங்கை இராணுவத் தளபதி பொன்சேகாவுக்கு இங்கு வரவேற்பு அளித்ததை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

''முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியை சுட்டுக் கொன்ற சீக்கிய இனத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவரான சிங்கை தான் இன்று இந்தியாவின் பிரதமராக சோனியா காந்தி அமர்ந்திருக்கிறார். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை இலங்கையில் வாழும் தமிழ் இனத்தைச் சேர்ந்த ஒருவர்தான் வெடிகுண்டால் வீழ்த்தினார். அது கண்டனத்திற்கு உரியது. அதற்காக ஒட்டுமொத்த இலங்கையில் வாழும் தமிழ் இனத்தைப் புறக்கணிப்பது எந்த விதத்தில் நியாயம்.

''சீக்கிய இனத்தின் கண்ணில் வெண்ணையை வைத்துவிட்டு, தமிழ் இனத்தின் கண்ணில் சுண்ணாம்பு வைக்கலாமா? இவ்விடயத்தில் இந்திய அரசின் செயற்பாடு முரண்பாடாகவே இருக்கிறது. அதனால் சிங்கள இராணுவத்திற்கு இந்திய அரசு உதவக் கூடாது என்பதை வலியுறுத்தி நாளை மறுதினம் மதுரையிலும், ஏப்ரல் 5ஆம் திகதி சென்னையிலும் இலட்சிய தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம் நடத்த உள்ளேன்.

### விலகுவதற்கான காரணம்

மாநில தேசிய சிறுசேமிப்பு ஆலோசனைக் குழுவின் துணைத் தலைவர் பதவியை வைத்துக்கொண்டு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகப் போராடுவது கூட்டணிக் கட்சிக்குள் குந்தகத்தை விளைவித்து விடக்கூடாது என்பதற்காவும் தமிழக முதல்வருக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதற்காகவும் இந்தப் பதவியிலிருந்து நான் விலகிக் கொள்கிறேன்.

''இலங்கைத் தமிழர்களுக்காகப் போராடுவதில் தொடங்கி தமிழக மக்கள் பிரச்சினைக்காக இலட்சிய தி.மு.க. தொடர்ந்து போராட்டங்கள் நடத்தும்'' - இவ்வாறு அவர் கூறினார்.



ராஜினாமாக் கடிதத்தை நேற்று முன்தினம் காலை முறைப்படி விலகல் கடிதத்தை கொடுத்து அனுப்பியுள்ளேன்.

ராஜினாமாவை முதல்வர் ஏற்றுக் கொள்ள மறுத்தால் என்ன செய்வீர்கள்? என்று கேட்டமைக்கு, ''ஒரு தடவை எடுத்த முடிவை எக்காரணத்தைக்கொண்டும் மாற்றிக்கொள்ள மாட்டேன்'' - என அவர் மேலும் பதிலளித்தார்.

## அறிஞர் அண்ணாவின் புதல்வன் கிணற்றில் வீழ்ந்து மரணம்

சென்னை, மார்ச் 26

மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணாவின் வளர்ப்பு மகனான டாக்டர் பரிமளம் (வயது - 67), உடல் நலக்குறைவால் ஏற்பட்ட விரக்தியில் கிணற்றில் விழுந்து மரணமானார்.

அரசு வைத்தியசாலையில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பரிமளம், கடந்த சில மாதங்களாக இருதய நோய் காரணமாக அவதிப்பட்டு வந்தார். 10 நாள்களுக்கு முன்பு இவருக்குத் திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. இதையடுத்து அவர் சிகிச்சைக்காக அப்பலோ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரது உடல் நலம் தேறியது.

திங்கட்கிழமை வீடு திரும்பிய இவர் நள்ளிரவு ஒரு மணியளவில் - தனது அறையில் இருந்து வெளியே வந்து, வீட்டின் பின்புறம் உள்ள கிணற்றுக்குள் குதித்து மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

## கிழக்கு மாகாணசபைக்கான வேட்பு மனு இன்று முதல் ஏற்பு

மட்டக்களப்பு,மார்ச்27

எதிர்வரும் மே மாதத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இன்று வியாழக்கிழமை தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன எனத் தெரிவிக்கப் படுகிறது.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் மாவட்ட செயலங்களில் மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலர்கள் மூலமாக வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர்கள் அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன. சுயேச்சைக் குழுக்கள் எதிர்வரும் 02ஆம் திகதி நண்பகல் 12மணிவரை கட்டுப்பணம் செலுத்துவதற்கு அவகாசம் வழங்கப்பட் டுள்ளது. வேட்பாளர்கள் ஒருவருக்கு தலா 2000 ரூபா வீதம் கட்டுப்பணம் செலுத்தப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து 14 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 17 பேரின் பெயர்கள் வேட்பு மனுவில் குறிப்பிடப்படவேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 11 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 14 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் இருந்து 10 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 13 பேரும் வேட்பு மனுவில் இடம்பெறவேண் டும் என்று மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர்கள் அறிவித்துள்ளனர்.

இம்முறை கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் இருந்து 9 லட்சத்து 82 ஆயிரத்து 721 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். (சி)

# அதிரடிப்படையை கிழக்கில் இருந்து விலக்க கோரவில்லை என்கின்றார் பிள்ளையான்

## தேசிய பாதுகாப்பின் முக்கியத்துவம் அவருக்குத் தெரியுமாம்

கொழும்பு,மார்ச்27

விசேட அதிரடிப்படையினரை கிழக்கில் இருந்து அகற்றுமாறு அரசிடம் தான் கோரினார் என்று எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த குற்றச்சாட்டை மறுத்திருக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிள்ளையான், போலியான குற்றச்சாட்டை முன்வைத்து கீழ்த்தரமான பிரசாரத் தில் ரணில் ஈடுபட்டிருக்கிறார் என்று பதிலுக்கு குற்றம் சுமத்தியிருக்கிறார்.

கிழக்கில் இருந்து அதிரடிப்படையினர் வெளியேறியமைக்கு பிள்ளையான் தான் காரணம் என்று ரணில் தெரிவித்த கருத்துக்கு மறுப்புத் தெரிவித்துத் தமது அமைப்பு சார்பு இணையத்தளத்திற்கு இக் கருத்தினை அவர் தெரிவித்திருக்கின்றார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

சிறுபிள்ளைத் தனமான இத்தகைய குற்றச்சாட்டுக்களை நான் இதற்கு முன்னர் கேள்விப்பட்டதேயில்லை. சுமார் 31 வருடம் இந்நாட்டின் ஆட்யை மேற்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, அரசியல் இலாபத்தைக் கருத்திற்கொண்டு இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கீழ்த்தரமான உத்திகளைக் கைக்கொள்வது கவலைக்குரிய விடயம்.

இலங்கை இராணுவத்தினது மேன்மை, வீரம் குறித்து எந்த வசனத்தையும் பேசாமல் பொய்யான குற்றச்சாட்டுக்களை மாத்திரம் இவர்கள் முன்வைக்கின்றனர்.

அத்துடன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் புதிய அரசியல் கட்சியாகும்.

கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் அண்மிக்கும்போதே எமது கட்சி பதிவு செய்யப்பட்டது. ஜனநாயக விழுமியங்களினூல் கட்சியினைக் கட்டியெழுப்புவதே எமது இலட்சியம். அதன் பொருட்டே உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டோம்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலிலும் இதற்காகப் போட்டியிடவுள்ளோம்.

ஐ.தே.க கட்சியினைப் போலல்லாது எமது எல்லை என்ன என்பதை நாமறிவோம். ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பின் முக்கியத்துவம், அதன் மகிமை பற்றி எமக்கு சிறந்த புரிந்துணர்வு உள்ளது. அது அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அதில் யாரும் தலையிடக் கூடாது. - என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிள்ளையான் தெரிவித்துள்ளார். (சி)



## யானைக் கூட்டத்தால் அ' புரத்தில் பதற்றம்

கொழும்பு,மார்ச்27

அநுராதபுரம் நகருக்குள் யானைகள் கூட்டமாக நுழைந்ததால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீரென கூட்டமாக இந்த யானைகள் புகுந்ததுடன் அங்கிருந்த பல வாகனங்களை சேதப்படுத்தியுள்ளன.

இதனை அறிந்த வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகளும் பொலிஸாரும் இணைந்து யானைகளை அங்கிருந்து விரட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். இருந்தும் கடந்த இரண்டு நாள்களாக இவற்றை அகற்றமுடியாமல் அங்கு பதற்றம் நிலவுகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரின் வன்னி நடவடிக்கை குறித்து ஆராய்வு

கொழும்பு,மார்ச்27

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் செஞ்சிலுவைச் சர்வதேச குழு மேற்கொண்டு வரும் பணிகள் குறித்து அமைப்பின் இலங்கைக்கான தலைவர் டூன் வன்டென் ஹொவ்வும் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவும் கூடி ஆராய்ந்துள்ளனர்.

இராணுவத் தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போதே இது குறித்து ஆராயப் பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பின்போது வன்னி நிலவரம் குறித்து அவசரமான சூழ்நிலைகளில் தொடர்புகொள்வதற்காக இராணுவ அதிகாரியொருவரை நியமிக்குமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன்போது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு எவ்வித தடையுமின்றி எந்நேரமும் வன்னி செல்லலாம் என உறுதியளித்துள்ள இராணுவத் தளபதி, அவசரமான சூழ்நிலைகளில் வன்னியில் உள்ள இராணுவத் தலைமையகத்தின் தளபதி ஜகத் ஜயசூரிய வைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுள்ளார் எனவும் கூறப்படுகிறது. (சி)

## ஈ.பி.டி.பியின் அலுவலக கட்டடச் சர்ச்சைக்கு இணக்கம்

கொழும்பு,மார்ச் 27

கொழும்பு,பார்க் வீதியில் அமைந்துள்ள சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. கட்சி அலுவலகம் அமைந்துள்ள கட்டடம் தனியார் வங்கியொன்றினால் சட்ட ரீதியாக உடைமையாக்கப்பட இருந்தது. எனினும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் வங்கி அதிகாரிகள் மற்றும் சட்டத்தரணிகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டை அடுத்து இந்த நடவடிக்கை தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

இவ் விவகாரத்தை ஒட்டிய நடவடிக்கைகளால் நேற்றுமுன்தினம் கிருலப்பனை பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து தெரிய வருபவை வருமாறு:-

மேற்படி அலுவலகம் அமைந்திருந்த காணியின்சொந்தக்காரர் சம்பத் வங்கியில் இந்த காணியை அடைமானம் வைத்து கடன் ஒன்றைப் பெற்றுள்ளார்.

பின்னர் காணி உரிமையாளர் வங்கியின் கடனை சரிவரச் செலுத்தாமையினால் குறித்த வங்கி நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தது. இதன்போது காணியின் உரிமையை தங்களுக்குப் பெற்றுத் தருமாறு வங்கி கோரிக்கை விடுத்தது. இதற்கு நீதிமன்றம் இசைவாக உத்தரவையும் பிறப்பித்தது.

இதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் பகல் வங்கி நிர்வாகிகள் சட்ட அதிகாரிகளுடன் குறித்த கட்டடத்திற்கு சென்று அதனை வங்கி உடைமையாக்க முற்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இரு பிரிவினருக்கும் இடையில் கருத்து மோதல்கள் ஏற்பட்டு பின்னர் ஓர் உடன்பாடு எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வங்கி உடை மையாக்கப்பட்டுள்ள அக் கட்டடத்திற்கு அதன் பாவனையாளர் உரிய வாடகையைச் செலுத்தவும் அதனைக் கொள்வனவு செய்வதற்கான முன்நடவடிக்கைகளை எடுக்கவும் உடன்பட்டமையை அடுத்தே இணக்கம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## இடைஞ்சல்கள் குறித்து கவலையில்லாத நிலையை நாம் அடையவேண்டும்

*மனிதன் சாதனைகள் பல பயின்றும், அமைதியற்று இருக்கிறான். ஏன்? உலகியல் மூலமாக, சமூகத்தின் மூலமாக, அரசியல் மூலமாக, அவனுக்குப் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. இவற்றின் காரணமாக அவனால் ஒருமைத் தன்மையை உணர இயலவில்லை. முதலில் இந்த இடையூறுகளை அவன் விலக்கவேண்டும். அவற்றைக் கவனியாதே. உனது இலட்சியத்தில் கவனம் செலுத்து.*

*அனைத்தும் கவலை. பிறப்பு ஒரு கவலை. குடும்ப வாழ்க்கை ஒரு கவலை. பிள்ளைப் பிராயம் ஒரு கவலை. முதுமை ஒரு கவலை. அன்றாட வாழ்க்கை ஒரு கவலை. தோல்வியால் கவலை. இடைஞ்சல்களால் கவலை. எப்போதும் கவலை. கவலையில்லாத மனிதன் யாருமே இல்லை. ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு கவலை இருக்கும். ஒருவருக்கு அதிகக் கவலை, அடுத்தவருக்கு கவலை குறைவு. இது பரிமாணத்தின் வேறுபாடு மட்டுமே. இருவருக்கும் கவலையின் தன்மை ஒன்றே.*



*மனம் இடைஞ்சல்களைப் பற்றிக் கவலைப்படாத ஒரு நிலையை நாம் அடையவேண்டும். முழுமையான நிலையை அடைய, இது சரியா, தவறா என்று விசாரித்தறிய வேண்டும். தவறான வழியில் செல்லக்கூடாது, பவித்ரமான, தெய்வீக வழியைப் பின்பற்ற வேண்டும். யாருக்கும் எந்தக் கெடுதலும் விளைவிக்கலாகாது. யாருக்கும் கெடுதல் வரும் சூழ்நிலையை ஏற்படுத்தலாகாது. சத்ய வழியைப் பின்பற்றும்போது நீ பயப்படத் தேவையில்லை.*

சாயி சிந்தனை

# அதிரடிப்படையினரின் இடமாற்றத்துக்கும் பிள்ளையான் குழுவுக்கும் சம்பந்தமில்லை

## அமைச்சர் கெஹெலிய கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 27

பிள்ளையான் குழுவினரின் கோரிக்கைக்கு இணங்கவே அதிரடிப்படையினர் கிழக்கில் இருந்து வெளியேற்றப்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் எதுவித உண்மையும் இல்லை. பொலிஸ் மா அதிபரின் உத்தரவிற்கமையவே இந்த இடமாற்றம் நடைபெற்றது. எனத் தேசியப் பாதுகாப்புக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைவரங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு செவ்வாயன்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்றபோதே அமைச்சர் இதனைக் கூறினார்.

இங்கு அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

இத்தகைய குற்றச்சாட்டுக்கள் அநியாயமானவை; நாட்டின் ஒருமைப்பாட்டையும் இறைமையையும் பாதுகாக்கும் படைவீரர்களின் மனோவலிமையைப் பாதிக்கக் கூடியவை. பிள்ளையான் குழுவினர் கிழக்கில் செயற்பட்டுக்கொண்டிருந்த அதே நேரத்தில்தான் விசேட அதிரடிப்படையினரும் அங்கு கடமை புரிந்தனர். இப்போது கிழக்கில் இருந்து 25 சதவீதமான அதிரடிப் படையினரே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். பிள்ளையான் குழுவினரின் கோரிக்கைக்கு ஏற்ப இந்த இடமாற்றம் இடம்பெறுவதாக இருந்தால் அது கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு முன்னரே நடைபெற்றிருக்க வேண்டும்.

பொலிஸ் திணைக்களத்தின் கீழ் செயற்படும் எவரையும் நாட்டின் தேவை கருதி எங்கும் இடமாற்றம் செய்யும் அதிகாரம் பொலிஸ்மா அதிபருக்கு உள்ளது. இந்த அடிப்படையிலேயே கிழக்கை மீட்கும் நடவடிக்கையில் கடந்த 22 வருடகாலம் சேவையாற்றியவர்களில் சிலர் இப்போது நாட்டின் தேவைக்கேற்ப இடமாற்றம் செய்யப்பட் டுள்ளனர் - என்றார். (சி)

# கைது செய்யப்பட்ட மூன்று பேர் விசாரணையின்றித் தடுத்து வைப்பு

## பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணனிடம் முறைப்பாடு

கொழும்பு, மார்ச் 27

கடந்த ஜனவரிமாதம் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட மூன்று பேர் விசாரணைகள் எதுவுமின்றி கொம்பனி வீதி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட் டிருக்கின்றனர் என இவர்களது உறவினர்கள் வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்ப பயிற்சிப் பிரதி அமைச்சர் பெ. இராதாகிருஷ்ணனிடம் முறைப்பாடு செய்துள்ளனர் என அவரது ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

தம்பாளை, அச்சுவேலியைச் சேர்ந்த மனோகரன் காண்டீபன் (வயது - 22), புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நந்தகுமார் நக்கீரன் (வயது - 27), யாழ். உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த சின்னப்பொடியன் கிருஷ்ணபிள்ளை (வயது - 55) ஆகியோரே இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ளவராவர்.

கொழும்பு - 02, யூனியன் பிளேஸிலுள்ள கிரவுண் சலூனில் சகல பதிவுகளுடனும் கடந்த 5 வருடங்களாகத் தொழில் புரிந்து வந்த காண்டீபனை கடந்த 23.01.2008இலும், கொம்பனி வீதி விக்றோரியா பேக்கரியில் சகல பதிவுகளுடன் கடந்த 9 வருடங்களாகத் தொழில் புரிந்து வந்த நக்கீரனை 27.01.2008 அன்றும் கைதுசெய்த கொம்பனி வீதி பொலிஸார், கடந்த ஜனவரி 31 ஆம் திகதி சென்றல் கோட் லொட்ஜில் தங்கியிருந்த கிருஷ்ணபிள்ளையையும் கைது செய்ததாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட மூவரும் எதுவித விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் பெரும் அசௌகரியங்கள் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளன எனவும் உறவினர்கள் பிரதி அமைச்சரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவர்களது விடுதலை தொடர்பாக பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவு இயக்குநர் நந்தன முனசிங்கவுடன் பிரதி அமைச்சர் தொடர்பு கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# இலவச மதிய உணவு விஷமாகியதில் 62 மாணவர்கள் வைத்தியசாலையில்

மஸ்கெலியா, மார்ச் 27

மஸ்கெலியா லக்கம் தமிழ் மகாவித்தியாலயத்தில் நண்பகல் இலவசமாக வழங்கப்படும் உணவு விஷமாகியதால் 62 மாணவர்கள் நோய்வாய்ப்பட்டு மஸ்கெலிய மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது.

இவர்களில் 32 பேர் சிகிச்சையின் பின்னர் வெளியேறியுள்ளனர் எனவும் ஏனையோர் வைத்தியசாலையில் தங்க வைக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் இவ் வைத்தியசாலை பிரதம டாக்டர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உணவில் நச்சுத் தன்மை ஏற்பட்ட காரணத்தால் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது சம்பந்தமாக பொதுச்சுகாதார அதிகாரிகளின் கவனத்திற்கு நாம் முன்வைத்திருக்கின்றோம். இது குறித்து பூரண பரிசோதனை நடத்தப்படும் - என்றார்.(க - 222)

## சிவாச்சாரிய அபிஷேகம்

(குருபட்டாபிஷேகம்)

இன்று (27.03.2008) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மேல் உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் பிரதம குரு **நாகேந்திர திவாகர சர்மாவுக்கு** உரும்பிராய் சிவதர்ம சாஸ்த்தா தேவஸ்தான ஆதீன கர்த்தா சபரிமலை குருசுவாமி **தாணு வாசுதேவ சிவாச்சாரியார்** நடத்தி வைப்பார்.

சுபம்.

வாசு தேவக்குருக்கள் - சுசிலாதேவி தம்பதிகள். (72441) திவாகர சர்மா - ஜெயப்பிரபா தம்பதிகள்.

## யோகாசன, தியான வகுப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

கந்தர்மடம், குமாரசாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்த மடத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு யோகாசன தியான வகுப்புகள் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்புபவர்களை பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது (203)

## உலக நாடக தின விழா

10 மணி பங்குனி 27

ஆற்றுகைகள் மேடையேற்றப்படும்

கைலாசபதி கலையரங்கு

வெறுவெளி அரங்கக்குழு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (72425)

## பொதுக் கூட்ட அறிவித்தல்

வடமராட்சி

**கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்**

**புலோலி, பருத்தித்துறை**

*இடம்* :- புலோலி பல நோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபம்

*காலம்* :- 30.03.2008 ஞாயிற்றுக்கிழமை

*நேரம்* :- முற்பகல் 9.30 மணி

மேற்படி பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் நா.மகேந்திரன் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் கலந்துகொள்ளத் தகைமையுள்ள அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சங்க அங்கத்தவர்களின் தற்போதைய வதிவிட விவரங்கள் முழுமையாக எம்மிடம் இல்லாதமையால் எல்லா அங்கத்தவர்களும் இதனை பொது அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**ம.ஜெயராசா** செயலாளர். (72453) **நா. மகேந்திரன்** தலைவர்.

## தவறிவிட்டது

பிறின்ஸ் கேட், கொழும்பு 12 என்னும் முகவரியுடைய கந்தையா நாகராஜா என்பவரது தே.அ. அட்டை (380531682 V) 'தேவி வாசா', தியேட்டர் ஒழுங்கை, இணுவில் என்னும் முகவரியுடைய விசேட அ.அட்டையும் 25.03.2008 அன்று இணுவில் பாற்சங்கத்திற்கும் ஆஸ்பத்திரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இணுவில் பாற்சங்கத்தில் ஒப்படைக்கவும். (72454)

## தவறிவிட்டது

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த நடராசா - வரதராஜன் என்பவரது தே.அ.அ. இல.(652031196V) விசேட அடையாள அட்டை, சராதி அனுமதிப்பத்திரம், இராணுவபாஸ், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் ஆகியவை 08.03.2008 சனிக்கிழமை திருநெல்வேலி பழங்கிணற்றடி பிள்ளையார் கோயிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் திருநெல்வேலி தாஸ் கடையில் கொடுத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (72448)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வவுனியா வளாகம், இலங்கை

## அறிவித்தல்

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப பட்டதாரி நெறிக்கான உளச்சார்பு பரீட்சை

மேற்படி பரீட்சைக்காக யாழ்ப்பாணத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கு 05.04.2008 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இராமநாதன் மண்டபத்தில் உளச்சார்பு பரீட்சை நடைபெறும். பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**பதிவாளர்.** **யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## மரண அறிவித்தல்



### சிவகுரு சீவரத்தினம்

புத்தூரைப் பிறப்பிடமாகவும் கிழக்கு வளவு, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சீவரத்தினம் 23.03.2008 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயலக்சுமியின் அன்புக் கணவரும் புத்தூரைச் சேர்ந்த சிவகுரு - சின்னத்தங்கம் தம்பதியரின் மகனும் மல்லாகத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற நாகம்மா, நடராசா (கனடா), சின்னம்மா, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற குணராசசிங்கம்(பெரியண்ணை), காலஞ்சென்ற குமாரசிங்கம் (நடுவில் அண்ணை), சுந்தரலிங்கம் (லிங்கண்ணை), காலஞ்சென்ற செல்வலக்சுமி, காலஞ்சென்ற கந்தசாமி, வவுஸ்திராதேவி, காலஞ்சென்ற காசிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் மங்களேஸ்வரி (டென்மார்க்), தேவகுமார் (கனடா), இராசகுமார்(சுவிஸ்), சதரூபி ஆகியோரின் தகப்பனாரும் பத்மநாதன், சுகிர்தராணி, ஜீவபூரணி, பேரானந்தமூர்த்தி (மதுர் டீசல் எஞ்சினியேர்ஸ், சுன்னாகம்) ஆகியோரின் மாமனாரும் அபிரா, ஜெனீஷா, மதுஷ், நிகேதன், மதுரிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2008) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கிழக்கு வளவு,*
*மல்லாகம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம், 1972 ரேவதி, 8இல் செவ்வாய், மூன்று சுற்று கிரக பாவம் 43 அரச திணைக்களத்தில் கடமையாற்றும் பட்டதாரி மணமகளுக்கு மணமகன் தேவை.

தொடர்பு: **மங்கள திருமண சேவை**
*42, நந்தாவில் லேன், கொக்குவில்.*
T.P.0771340071 (72445)

## இந்தியாவில் பிரிந்தாவன் கல்லூரியில் படியுங்கள்

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

உயர் தரம் A/L 2 சித்திகளுடன்

பதிவுகள் இப்பொழுது நடைபெறுகின்றன

**SMS 011 - 4520270 Name & Address for details**
**Contact: 0777 317043**
**Company Secretarial Services (Pvt) Ltd.**

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் PIRIMA பேட்டுக் குஞ்சுகள் 27.03.2008 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

* **றாஜின்** - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* **மதுரா** - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
* **சிற்றி பாம் றேடேர்ஸ்** - கல்வியங்காடு.
* **திருமகள் களஞ்சியம்** - சிவலிங்கப்புளியடி
* **P.ரவி** - சாவகச்சேரி
* உடுவில், நல்லூர், தெல்லிப்பழை, கோப்பாய் ஆகிய கால்நடைச் சங்கங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(72300)

## கரித்தாஸ் - கியூடெக்

பருத்தித்துறை சுனாமி நிவாரண நிரந்தர வீடமைப்புத் திட்டத்திற்கான

**கட்டடப் பொருள்களுக்குரிய கூறுவிலை கோரல்**

கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருள்களுக்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

இவ் வழங்கல்களுக்காக கூறுவிலை கோரும் விண்ணப்பப் படிவத்தினை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக் கொண்ட விவரங்களுக்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 01.04.2008ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் எமது அலுவலகத்திற்கு கிடைக்கக் கூடியதாக **'இயக்குநர் கரித்தாஸ் - கியூடெக், யாழ்ப்பாணம்'** என பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது நேரடியாகவோ கையளிக்கவும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **'கட்டடப்பொருள்கள் வழங்கலுக்கான கூறுவிலை'** என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

| பொருள்களின் விவரம் | தொகை |
|---|---|
| கதவு நிலைகள் | 525 தனி |
| கதவுகள் | 525 தனி |
| யன்னல் நிலைகள் | 525 தனி |
| யன்னல் கதவுகள் | 525 தனி |
| முறுக்குக் கம்பிகள் (10 MM) | 5600 தனி |
| மென் இரும்பு (5.5 MM) | 3000 தனி |
| கட்டுக் கம்பி | 300 Kg |

*14, மத்தியூஸ் வீதி,*
*தியோடு தெரு,*
*யாழ்ப்பாணம்.* (சி/551987)

இயக்குநர்,
கரித்தாஸ் - கியூடெக்.

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அமைதித் தீர்வு காண்பதற்கு தெற்கில் மனமாற்றம் அவசியம்

*''இலங்கைத் தமிழர்கள் தங்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளாகத் தமிழீழ விடுதலைப் புலிகளையே கருதுகின்றார்கள். புலிகளின் பங்களிப்பு இல்லாமல் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது சாத்தியமில்லை.''*

தென்னாபிரிக்காவின் பிரதித் தொடர்பாடல் அமைச்சர் இராதாகிருஷ்ண படையாச்சி லண்டனில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இடம்பெற்ற ஒரு முக்கிய கருத்தரங்கினிடையே இவ்வாறு தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

அவர் கூறுவதுதான் யதார்த்தம் என்றாலும் - மெய்மை நிலைமை என்றாலும் -

அதனை அப்படியே அடியோடு புறக்கணித்துக் காரிய மாற்ற முனைகின்றது கொழும்பு அரசு.

விடுதலைப் புலிகளைத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளவே முடியாது என்று உறுதிபடக் கூறியுள்ள மஹிந்தரின் அரசு, அவர்களை ஓரங்கட்டி, ஒதுக்கிவிட்டு, இனப்பிரச்சினையைத் தீர்த்து, நாட்டில் அமைதியை ஏற்படுத்தலாம் என மனப்பால் குடிக்கின்றது; பகல் கனவு காண்கின்றது.

ஈழத் தமிழர்களின் அரசியல் - வாழ்வியல் உரிமைகளுக்காகப் போராடும் உயர் சக்தியாகவும், தமிழர்களுக்காகப் பேரம் பேசும் வலிமையாகவும் உயர்ந்து நிற்கும் விடுதலைப் புலிகளைத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்பதை மறுத்து -

அவர்களை ஒதுக்கித்தள்ளிவிட்டு அமைதித் தீர்வு காண்பது என்ற தந்திரோபாயத்தை தென்னிலங்கையில் முதன் முதலாகக் கையாளும் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ அல்லர்.

இந்த நொண்டிக்குதிரைத் தந்திரோபாயத்தில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாஸா, சந்திரிகா குமாரதுங்க என்று முன்னாள் ஜனாதிபதிகள் பலரும் ஏறி விழுந்துள்ளனர். எல்லோரும் ஏறி விழுந்த நொண்டிக்குதிரையில் சக்கடத்தார் தானும் ஏறி சறுக்கி விழுந்தார் என்ற மாதிரி இப்போது அதே தந்திரோபாயத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஏற முயல்கிறார்.

இலங்கை அரசுத் தலைவர்கள் மட்டுமல்லாமல், இலங்கைத் தீவில் தமிழர் தாயகத்தைத் தன்னுடைய சுமார் ஒன்றரை லட்சம் துருப்புகளைக் கொண்டு ஆக்கிரமித்த இந்தியா கூட இந்தத் தந்திரோபாயத்தைப் பயன்படுத்தித்தான் முயற்சி எடுத்து, முறிந்து போய், வெறுங்கையுடன், அவமானம் மேலிட, திரும்பித் தனது நாட்டுக்கே நடையைக் கட்டியது.

இராணுவ நடவடிக்கைகளை மூர்க்கமாக்கித் தீவிரப்படுத்தி, கடும் நெருக்குவாரங்களைக் கொடுத்து, விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகவும்,அரசியல் ரீதியாகவும் ஓரம்கட்டி, ஒழித்துக்கட்டிவிட்டு, மறுபுறத்தில் புலிகள் விரோத அமைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தான் எண்ணியதைச் சாதிக்கலாம் என்று இந்தியாவும் கனவு கண்டது.

ஆனால் அந்த முயற்சி, பேரழிவு யுத்தமாகவும், அதன் பெறுபேறாக எண்ணிலடங்கா உயிர், உடைமைகளின் நாசமாகவும் பகல் கனவாக முடிந்ததே தவிர, வெற்றியளிக்கவில்லை.

''புலிகள் வெற்றிகரமாக ஒதுக்கப்படுவார்களானால் அவர்கள் சமாதான வழிக்குத் திரும்புவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என நான் நம்பினேன். எனது இந்த மதிப்பீடு தவறில் முடிந்தது. இலங்கைத் தமிழர்களிடமிருந்து விடுதலைப் புலிகளை வெற்றிகரமாக ஓரம்கட்டிவிடலாம் என்ற எனது எதிர்பார்ப்பும் தவறாக முடிந்தது'' - என்று இலங்கையில் அவ்வேளையில் இந்தியாவின் சகல நடவடிக்கைகளுக்கும் சூத்திரதாரியாக இருந்து இலங்கை விவகாரத்தில் புதுடில்லியை வழிப்படுத்தி, இயக்குவித்த கொழும்புக்கான இந்தியத் தூதுவர் ஜே.என். டிக்ஸிற் தமது நூல் ஒன்றில் தாமாகவே எழுத்தில் பின்னர் ஒப்புக்கொள்ள வேண்டியவரானார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு முன்னர் ஆட்சியிலிருந்த இலங்கையின் அரசுத் தலைவர்கள் தமது அனுபவங்களை எழுத்தில் வடிப்பார்களாயின் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான தமது பட்டறிவு பற்றிய அவர்களின் பதிவும் இந்தமாதிரித்தான் முடிந்திருக்கும் என்பது நிச்சயம்.

ஆகவே, இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினைக்கான தீர்வை செம்மையாகக் கையாள்வதற்கு, கொழும்பு அரசுத் தலைமை விரும்புமாயின் அதற்கு அடிப்படையான சில விடயங்களை - யதார்த்தங்களை அது புரிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்;அதன்படி செயற்பட வேண்டும்.

* பௌத்த - சிங்கள மேலாண்மைத் திமிரோடு விடயங்களை நோக்கும் அதிகாரத் தொனியை அது முதலில் கைவிட வேண்டும். ஈழத் தமிழர்கள் இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கைத் தமது பாரம்பரிய தாயகமாகக் கொண்ட பூர்வீகத் தேசிய இனம் என்ற அடிப்படை உண்மையை ஏற்று, சமதரப்பு அந்தஸ்துடன் அவர்களை அணுகி, அவர்களின் பிரச்சினைகளுக்கு நியாயத் தீர்வு காண முன்வர வேண்டும்.

* இலங்கைத் தீவில் பாதிக்கப்பட்டுள்ள சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களின் நீதி, நியாயம்மிக்க அபிலாஷைகளைப் பரிவோடு பரிசீலிக்கும் மனப்பக்குவமும் தாராளப் போக்கும் விட்டுக்கொடுத்துத் தீர்வுகாணும் சிந்தனையும் கொழும்புக்கு இருக்கவேண்டும்.

* ஈழத் தமிழர்களின் பிரதிநிதிகள் யார், அவர்களின் போராடும் சக்தி எது என்பதைத் தனது அரசியல் விருப்பு - வெறுப்புக்கு அப்பால் நின்று சீர்தூக்கிப் பார்த்து உண்மை நிலையை ஒப்புக்கொள்ளும் நேர்மைத்தனம் கொழும்புக்கு அவசியம்.

- இந்தக் கட்டமைப்புக்குள் தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்ள கொழும்பின் தலைமை இணங்காவிடில், இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும்படி எந்த நாடும் - எந்தத் தரப்பும் - எந்தத் தலைவர்களும் - இலங்கையை வற்புறுத்தினாலும் கூட, அதனால் பலன் கிடைக்கப்போவதில்லை. இது தெளிவானதாகும்.

# கிராமங்களில் மக்கள் மயப்படுத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகளுக்கென மீள் எழுச்சித்திட்டம் நடைமுறையில்

## உலக வங்கியின் அனுசரணையுடன் செயற்படும்

யாழ்ப்பாணம்,மார்ச் 27

'நியாப்' திட்டத்தின் மையக் கிராமங்களில் நிலைத்து நிற்கக் கூடிய மக்கள் மயப்படுத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் நோக்குடன் மீள் எழுச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நியாப் திட்டம் என நடைமுறைப்படுத்தப்பட்டவை புதிய பரிமாணத்துடன் மீள் எழுச்சித் திட்டம்(Re-Awakening Project) என செயற்படுத்தப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் மேற்படி திட்டத்தின் அறிமுக விழா அண்மையில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, மேலதிக திட்டப் பணிப்பாளர்(வடக்கு) எந்திரி சி.வி. வினோதராஜ், மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.விசுவலிங்கம் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை, வடக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் திருமதி பி.சிவலிங்கம் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

உலக வங்கியின் அனுசரணையுடன் ஆரம்பமாகியுள்ள மீள் எழுச்சித் திட்டம் நியாப் திட்டங்களில் ஒரு சகோதரத் திட்டமாகவும் நியாப் I, நியாப் II திட்டங்களை அமுல்படுத்தும் வகையில் கிடைக்கப்பெற்ற அனுபவங்கள் பயனுறுதி வாய்ந்த செயற்பாடுகளை உள்ளடக்கியும் உருவாக்கப்பட்டுள்ளது. நியாப் I, நியாப் II திட்டங் களின் தொடர்ச்சியும் பேணப்படவுள்ளது.

இத்திட்டம் குறித்து யாழ். அரச அதிபர் தெரிவிக்கையில் -

மீள் எழுச்சித்திட்டம் மையக் கிராமத்தின் தூரநோக்கோடு இணைந்து செயற்படவல்லதாகவுள்ளது.

* சமூகத்தை அணிதிரட்டி ஒன்று சேர்த்து செயற்படுவதன் மூலம் கிராம அபிவிருத்தி நிறுவனத்தினைத் தோற்றுவித்தல்.

* இதில் நலிவுற்றோர்கள், ஏழைகள், ஊனமுற்றோர் போன்றோரது குரலையும் ஓங்கச் செய்தல்.

* ஆரம்பிக்கப்பட்ட கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாக கிராம அபிவிருத்தித் திட்டத்தினை தயாரித்து மக்கள் மூலமாக நேரடியாக செயற்படுத்தல்.

* இச்செயற்பாட்டில் சேவைகளை வழங்கும் நிறுவனங்களாக அரச/தனியார் நிறுவனங்களின் சேவைகளை வெற்றிகரமாக பெற்றுக்கொள்ளும் வல்லமையை வளர்த்தல் ஆகியவை இத்திட்டத்தில் உள்ளடங்கவுள்ளன.

இத்திட்டத்தின் ஊடாக

* சமூகத்தின் நம்பகத் தன்மையை நன்கு வளர்ப்பதாக அமையும்.

* சமூக வலுவூட்டலில் முன்னரங்கு அலுவலர்களும், திட்டத்தின் சமூக வலுவூட்டாளர்களும் இணைந்து செயற்பட்டு திட்டம் நிலைத்து நிற்கக்கூடிய தன்மை பேணப்படும்.

* சமூகத்திற்கு தேவைப்படும் ஆற்றலும் அறிவும் வளர்த்தெடுக்கப்பட்டு சமூகம் சுயமாகச் செயற்படும் வல்லமை உருவாகும்.

* மையக் கிராம மக்களது வருமானமும் சேமிப்பு, தொழில் வாய்ப்பு, உற்பத்திகள் தூண்டப்படுவதுடன் சந்தை வாய்ப்புக்களும் தொடர்புபடுத்தப்படும்.

இச்செயற்பாடுகளுக்கு மேலதிகமாக நியாப் I, நியாப் II மீள் எழுச்சித் திட்டங்கள் குடாநாட்டின் குடிதண்ணீர் பற்றியும் மிகவும் அக்கறையாக உள்ளது. விவசாய தொழில்முயற்சி தூண்டப்படும் பொழுதும் கூடுதலாக நீர் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுவதனால் நிலத்துக்கடியில் உள்ள நீர்வளம் வற்றிவரும் நிலையும் உள்ளது. இதன் மூலம் குடிதண்ணீர் தரம் மாசு அடையும் நிலை உள்ளது.

இவற்றைத் தவிர்க்கும் பொருட்டு மழை நீர் சேகரிப்பு, குளங்களை புனரமைத்தல் என்பனவும் இடம்பெற்றன. குடிதண்ணீர் பற்றி விரிவான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் வழுக்கையாற்றுத் திட்டத்தினை அமுல் செய்தல், தொண்டைமானாறு வழியே கடல் நீர் உட்புகுவதனை தடுப்பதற்கான நீர்ப்பாசன திணைக்களக் கதவுகளை மீண்டும் புனரமைத்தல், உப்பு நீர் மீண்டும் தீவுப் பகுதிகளிலும் ஏனைய இடங்களிலும் பரவுவதனை தடை செய்ய அமைக்கப்பட்ட மண் அணைகளையும் தொடர்புடைய கட்டுமானங்களையும் மீண்டும் புனரமைக்கும் நடவடிக்கைகளும் தொடர்ந்து செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. (202)

# வாழ்நாள் பேராசிரியர் அமரர் நந்தியின் 80ஆவது பிறந்த தின நினைவு ஒன்றுகூடல்



யாழ்ப்பாணம்,மார்ச்27

வாழ்நாள் பேராசிரியர் அமரர் நந்தி (சிவஞானசுந்தரம்) அவர்களின் 80ஆவது பிறந்த தின நினைவு ஒன்றுகூடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'பேராசிரியர் நந்தி பற்றி' என்னும் தலைப்பில் துணைவேந்தர் என்.சண்முகலிங்கனும், 'மருத்துவ ஆசானாகப் பேராசிரியர் நந்தி' என்னும் தலைப்பில் மருத்துவபீட சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரியரட்ணமும், 'நந்தியின் இலக்கியப் பணிகள்' என்னும் தலைப்பில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும், 'நந்தியின் ஆன்மீகப் பணிகள்' என்னும் தலைப்பில் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி க.சிவனேசன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து பேராசிரியர் நந்தியின் ''குட்டிகளுக்கு பாட்டுக்கள்'' என்னும் இறுவெட்டும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இதன் முதற்பிரதியை திருமதி சாந்தி சிவஞானசுந்தரம் பெற்றுக்கொள்வார். மதிப்பீட்டுரையை த.தவநாதன் றொபேட் நிகழ்த்துவார். (203)

# சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சுகநலம் அடைய வேண்டிப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், மார்ச் 27

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்கட்டி கடும் சுகயீனம் அடைந்திருப்பதால் அவருக்கு சுகநலம் வேண்டி அகில இலங்கை இந்து மாமன்றம் பிரார்த்தனையையும் சிறப்புப் பூசையையும் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

மன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானுக்கு நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு சிறப்புப் பூசைகள் நடத்தப்பட்டு பிரார்த்தனை செய்யப்படவுள்ளது.

அவர் சுகநலமடைந்து பணிகளைத் தொடர இறைவனைப் பிரார்த்திக்குமாறு சகல இந்து மக்களையும் இந்து மாமன்றம் கேட்டுள்ளது. (203)

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் 5.5 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு

## எதிர்வரும் 7ஆம் திகதி கும்பாபிஷேகம்

கரவெட்டி,மார்ச்27

சரித்திரப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் சுமார் 5.5 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதன் புனரமைப்புப் பணிகள் வெகு விரைவில் - ஒரு சில தினங்களில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் 7ஆம் திகதி ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யுத்த அனர்த்தங்களால் 1986ஆம் ஆண்டு இந்த ஆலயம் பெரும் சேதமடைந்திருந்தது.

1988ஆம் ஆண்டு இந்த ஆலயம் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

தற்போது மீண்டும் ஆலயம் புனரமைக்கப்பட்டு எதிர்வரும் 7ஆம் திகதி கும்பாபிஷேகம் நடத்தப்படவுள்ளது.

அன்றைய தினம் அதிகாலை 5 மணிக்கு உதயபூசையுடன் ஆரம்பமாகும் கும்பாபிஷேகத்தில் காலை 6.45 மணிக்கு ஆலய பிரதிஷ்டையும் முற்பகல் 11.30 மணிக்கு மணிக்கோபுர கலசாபிஷேகமும் தொடர்ந்து கும்ப ஆராதனையும் வீதியுலாவும் இடம்பெறும்.

தொடர்ந்து 41நாள்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது. (202-70)

# ஞானச்சுடர் பங்குனிமாத இதழ் நாளை வெளியீடு

வடமராட்சி, மார்ச் 27

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆத்மீக சஞ்சிகையின் பங்குனி மாத இதழ் வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சஞ்சிகையின் வெளியீட்டுரையை தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய அதிபர் வ.கணேசமூர்த்தி நிகழ்த்துவார். (203-236)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி - 15 | 28.03.2008 வெள்ளிக்கிழமை |
| திதி: சஷ்டி | மு.ப. 10.21 |
| நட்சத்திரம் : | கேட்டை மாலை 06.19வரை |
| சுபநேரம் : | 06.13 - 07.43 |
| ராகுகாலம் : | 10.43 - 12.13 |

# கொமர்ஷல் வங்கியின் நெல்லியடிக் கிளை புலமைப் பரிசில் மாணவரை இன்று கௌரவிக்கிறது

கரவெட்டி,மார்ச்27

கொமர்ஷல் வங்கியின் நெல்லியடிக் கிளை தனது பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள 2007 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 55 மாணவர்களுக்கு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கௌரவிப்பு நிகழ்வை நடத்தவுள்ளது.

நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலய கல்யாண மண்டபத்தில் வங்கி முகாமையாளர் எஸ். கே.குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராஜா, கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொளவர்.

'அருணலு' திட்டத்தின்கீழ் பாடசாலை ரீதியாக உயர் புள்ளிகளைப் பெற்ற 3 மாணவர்களுக்கு தலா 10 ஆயிரம், 7,500ஆயிரம், 5 ஆயிரம் ரூபா வீதம் இந்நிகழ்வில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-70)

யா/ இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்

**வாழ்த்துகின்றோம்**

எமது கல்லூரி பழைய மாணவர்
**செஞ்சொற்செல்வன் ஆறு.திருமுருகன்**
அவர்கள் யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக
நியமனம் பெற்றுள்ளமையை
கல்லூரிச் சமூகம் வாழ்த்துகிறது.

பாடசாலைச் சமூகம், பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(72485)

## பெயர் மாற்றம்

நாகர்கோவில் தெற்கைச் சேர்ந்த வீரகத்தி பரமசிவம் ஆகிய நான் 16.07.2007 முதல் எனது பெயரை வீரகத்தி பரமேஸ்வரன் என மாற்றிக் கொண்டேன் என்பதை இலங்கை அரசுக்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன். சகல ஆவணங்களிலும் வீ.பரமேஸ்வரன் என்றே கையெப்பமிடுவேன் என்பதையும் வெளிப்படுத்துகிறேன்.

வீ.பரமேஸ்வரன்

(சி/5502002)

## VOGT

## வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம்

## கள இணைப்பாளர் பதவி வெற்றிடம்

வடமராட்சி பிரதேச பிரிவிலுள்ள 28 கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் அங்கத்துவமாக கொண்ட "வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம்" சமூகசேவை ஒழுங்கமைப்புகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட போரூட் பங்காள நிறுவனமாக நுண்நிதி, மது, புகை, போதைப் பொருள் பாவனை எதிர்ப்பு, சமூக அபிவிருத்தி போன்ற திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. இந் நிறுவனம் கள இணைப்பாளர் ஒருவரை நியமிக்க உள்ளது. ஆகவே 21 - 45 வயதிற்குட்பட்ட இருபாலரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சேவையின் தன்மை :- மது, புகை, போதைப் பொருள் பாவனைதடுப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தலும், கண்காணித்தலும்.

கல்வித் தகைமைகள் :-

1. G.C.E A/L சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட.
2. மது, புகை, போதைப் பொருள் பாவனை தடுப்பு தொடர்பான துறையில் சான்றிதழ்.

ஏனைய தகைமைகள் :-

* சமூக சேவைகளில் வேலை அனுபவங்கள், கிராம சமூக அமைப்புக்களில் நிர்வாக அனுபவங்கள்.
* மது, புகை, போதைப் பொருள் பாவனை தடுப்பு தொடர்பான ஆர்வம்.
* மது, புகை, போதைப் பொருள் பாவனை தடுப்பு நடவடிக்கைகளில் அனுபவம்.
* கணனி, ஆங்கில அறிவு இருப்பின் விரும்பத்தக்கது.

விண்ணப்பங்களை தலைவர், வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், VOGT, விக்னேஸ்வரா வீதி, நெல்லியடி, கரவெட்டி என்ற முகவரிக்கு 15.04.2008க்கு முன் அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
26.03.2008 (சி/552001) வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம்

## மரண அறிவித்தல்

### முருகேசு துரைராசா



யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொட்டடி, சிவன் பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு துரைராசா அவர்கள் 25.03.2008 செவ்வாய்க்கிழமை சுவிற்ஸர்லாந்தில் இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சோமசுந்தரம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கோணேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பொன்னம்மா, சின்னம்மா மற்றும் சண்முகம், காலஞ்சென்றவர்களான கனகரெத்தினம், கதிரவேற்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் சுப்பிரமணியம், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் மோகனறாஜ் (சுவிஸ்),கிரிராஜா(சுவிஸ்), லதா(ஜேர்மன்), இந்து (சுவிஸ்), உதயறாஜ்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். சிவதாஸ்(ஜேர்மன்),ஜெயதாஸ்(கனடா), ஜெயவதனி (லண்டன்), சசிவதனி (கனடா) ஆகியோரின் சித்தப்பாவும். வள்ளிநாயகி (சுவிஸ்), வசந்தராணி(சுவிஸ்), சுரேந்திரன் (ஜேர்மன்), சிவகுமார்(சுவிஸ்), பேரின்பமணி (ஜேர்மன்), திலகரூபி (கனடா), சிவகாந்தறூபன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனரும். விதுரன் (ஜேர்மன்), வின்சி(ஜேர்மன்), விதுஷன் (சுவிஸ்), சிந்து (சுவிஸ்), அடச்றாஜ் (சுவிஸ்), பிரியங்கா, சியானுகா, அபிக்கா (ஜேர்மன்), ஸ்ரீபன், பிரதீபன், நவீன், பஜீவன், அஞ்சலா (கனடா), சாம்பவி, சாகித்தியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அனாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2008) வியாழக்கிழமை பி.ப. 4 மணியளவில் சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.மகேஸ்வரி
(மைத்துனி)

*இல.95, சிவன்பண்ணை வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.* (72472)

## சாவகச்சேரியில் விவசாய அபிவிருத்தித் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

விவசாய உற்பத்தித் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரசபை வளாகத்தில் மேற்கொண்ட காய்கறித் தோட்டம் நல்ல விளைச்சலைத் தந்துள்ளது.

இதன் அறுவடை விழா நேற்று முன்தினம் சபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தலைமையில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக விவசாயத் திணைக்களத்தின் தென்மராட்சி பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி எஸ்.ஜெகதீஸ்வரி கலந்து கொண்டார்.

அறுவடை செய்யப்பட்ட நிலக்கடலை சபை உத்தியோகத்தருக்கு தலா ஒரு கிலோ வீதம் வழங்கப்பட்டது. அத்துடன் கத்தரிக்காய், பாவற்காய், பூசனிக்காய்,புடலங்காய் ஆகியவையும் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

வடக்கு மாகாண உள்ளூராட்சி துணையாளர் பி.ஜோன்சனால் விடுக்கப்பட்ட சுற்று நிருபப் பிரகாரம் விவசாய உற்பத்தித் திட்டம் மேற் கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-27)

## குடும்ப அட்டைகளை பெறுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 27

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் ஜே/108 கிராம அலுவலர் பிரிவுக்கான குடும்பப் பங்கீட்டு அட்டைகள் தற்சமயம் வழங்கப்பட்டு வருகின்றன.

தமது குடும்ப அட்டைகளை இது வரை பெற்றுக்கொள்ளாதவர்கள் பழைய குடும்ப அட்டையை ஒப்படைத்து புதிய அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறு கிராம அலுவலர் திருமதி இ. இராகினி அறிவித்துள்ளார். அத்துடன் ஜே/109 பகுதியில் வதியும் மக்களுக்கான குடும்ப அட்டை'உ' இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் கிராம அலுவலரால் வழங்கப்படவுள்ளன.

குறிப்பிட்ட தினங்களில் தமக்கான பங்கீட்டு அட்டையைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் பின்னர் அதனைப் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (203-111)

## சின்னம் சூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச்27

சாவகச்சேரி இந்துக் கல்லூரி சாரணர்களுக்கு வெள்ளிச் சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

சாரணர் தலைவர் கா.கமலநாதன் சாரணர்களுக்கு வெள்ளிச் சின்னம் சூட்டி சத்தியப்பிரமாணம் செய்துவைத்தார். (202-207)

## கூட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

கல்விச் சேவையாளர் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் யாழ்.மாவட்டப் பேராளரைத் தெரிவு செய்யும் கூட்டம் நாளை மறுதினம் காலை 8 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள் ளது.

இக் கூட்டத்தில் சங்கத்தின் அங்கத்தவர்கள் சகலரையும் கலந்து கொள்ளுமாறு சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார். (202)

* * *

யாழ்ப்பாணம், மார்ச்27

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தெரிவுக் கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் வைத்தியசாலைப் பிரதேசத்தவர்கள், ஆர்வலர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (202)

## வாகனவிற்பனை

50சிறி கயஸ் மற்றும் 40 சிறி எல்வ் மொடல் BODYயுடன் மலிவு விலையில் விற்கப்படும் தொ.பே. 077 4955713

சந்தரலிங்கம் (JP), கலைவாணி
ஆடுபாவத்தை, வதிரி, கரவெட்டி.

## கணனி தட்டெழுத்தாளர் உடன் தேவை

கணனி தட்டெழுத்தாளர் தேவை. அச்சகத்தில் வேலை செய்தவர்கள் விரும்பத்தக்கது. உடன் நேரில் வரவும்.

**சாந்தி அச்சகம்**
இல.575. கே.கே.எஸ்.வீதி. யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கப் பணியாளர்
திரு.சி.தர்மலிங்கம் அவர்களின் அன்புத் தாய்
**சின்னப்பு தெய்வானை**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக பிராத்திக்கின்றோம்.

அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்க
ஊழியர் நலன்புரிச் சங்கம் (72456)

## மரண அறிவித்தல்கள்

### அருட்திரு டானியல் இராஜரட்ணம் அம்பலவாணர்

**(Rev. D.R. Ampalavanar M.A., B.D.)**



தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாணத் திருமண்டலத்தின் குருவாக இருந்து இளைப்பாறியவரும் தென் இந்திய திருச்சபையின் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் நீண்ட காலம் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணிபுரிந்தவருமான அருட்திரு டீ.ஆர்.அம்பலவாணர் அடிகளார் 23.03.2008 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்செனறவர்களான அருட்திரு J.P.அம்பலவாணர்-அன்னம்மா அம்பலவாணர் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற ஈவ்லின் இராசமலரின் (ஆசிரியை) அன்புக் கணவரும், இராஜமோகன், இராஜநிமலன் (தென்னிந்தியத் திருச்சபை ஊழியன், வேலணை, புங்குடுதீவு திருச்சபைகள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்ற பேரருட் கலாநிதி D.J. அம்பலவாணர் (தென்னிந்திய திருச்சபை யாழ்.திருமண்டலத்தின் 2ஆவது பேராயர் ) மற்றும் அருட்திரு D.S. அம்பலவாணர், J.P.அம்பலவாணர் (ஆஸ்திரே லியா), திருமதி கிறேஸ் அதிசயம் முத்தையா (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவகரனின் பாசமிகு பேரனும் ஆவார்.

தற்போது வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபை பேராலயத்தில் வைக்கப்பட்டுள்ள அன்னாரின் பூதவுடல் இன்று (27.03.2008) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடை பெறும் இறுதி ஆராதனையின் பின்னர் உடுவில் (மல்வம்) தென்னிந்திய திருச்சபை கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவிலில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும் சேமக் காலைக்குச் சென்று திரும்புவதற்கு வாகன வசதி செய்யப்பட்டுள்ளது.

தகவல்: இராஜநிமலன் அம்பலவாணர்
*(மகன்-ஊழியன், தென் இந்திய திருச்சபை, வேலணை, புங்குடுதீவு சபைகள்)*

(சி/551974)

### கந்தசாமி தர்மராஜா



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சங்கானை, பிளாக் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தர்மராஜா (பத்தர்) நேற்று (26.03.2008) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி- செல்லம்மாவின் அன்பு மகனும் காலஞ் சென்ற கனகாம்பிகையின் அன்புக் கணவரும் ரவீந்திரன் (J.P.), மகேஸ்வரன், சுவேந்திரன் (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்- தொழிற்றுறை, கச்சேரி-யாழ்), கலைச்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கரத்தினம், காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் பரமேஸ்வரி, செங்கமலர், செல்வராணி ஆகியோரின் அருமைச் சகோதரனும் யாழினி (உதவி விரிவுரையாளர், விவசாயபீடம், யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மாமனும் அச்சயனின் அருமைப் பேரனும் துரைரத்தினம், ஜெயலட்சமி (கொழும்பு), சுப்பிரமணியம், தங்கராசா, இராஜகோபால், இராசதுரை ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2008) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பிளாக் வீதி,*
*சங்கானை.*
*0777- 166492* (72464)

தகவல்:
க.ரவீந்திரன் J.P. (மகன்)

### திருமதி சிவசக்திவேல் உலகேஸ்வரி



பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் கொட்டாஞ்சேனை, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசக்திவேல் உலகேஸ்வரி நேற்று (26.03.2008) புதன்கிழமை கொழும்பில் காலமானர்.

அன்னார் க.சிவசக்திவேலின் (முன்னாள் கூட்டுறவுச்சங்க முகாமையாளர்), அன்பு மனைவியும் சோமசுந்தரம் அவர்களின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

திரு திருமதி ரகுராஜா
கொழும்பு -13 (72469)
T.P. 0112473029

# தொடரை வென்றது இங்கிலாந்து


வெற்றிக் கிண்ணத்துடன் இங்கிலாந்து அணி.

நேப்பியர், மார்ச் 27

மொன்றி பனிஷரின் சுழலில் நியூஸிலாந்து அணி சிக்கித் தவிக்க, நேப்பியரில் நடந்த மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 121 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியைப் பதிவுசெய்தது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது.

553 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 431 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியடைந்தது. நியூஸிலாந்தின் 10ஆவது வீரராகக் களமிறங்கிய வேகப் பந்துவீச்சாளரான ரிம் சௌத்தி இறுதி நேரத்தில் சிக்ஸர் மழை பொழிந்து ரசிகர்களைக் குஷிப்படுத்திய போதும், தனது அணியை வெற்றிக்கடலில் ஆனந்தக்கூத்தாடவைக்க முடியவில்லை. 29 பந்துகளில் அரைச் சதத்தை நிறைவுசெய்த அவர், டெஸ்ட் போட்டிகளில் விரைவான அரைச்சதத்தை அடித்த நியூஸிலாந்து வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

அதிரடியாக ஆடிய சௌத்தி 40 பந்துகளில் 77 ஓட்டங்களை விளாசி இறுதிவரை ஆட்டமிழக்காமலிருந்தார். அவரது ஓட்டஎண்ணிக்கையில் 4 பவுண்டரிகளும், 9 சிக்ஸர்களும் அடங்குகின்றன. கடைசி விக்கெட்டுக்காக கிறிஸ் மாட்டினுடன் இணைந்து 84 ஓட்டங்களை சௌத்தி பெற்றுக்கொடுத்திருந்தார்.

### 9 சிக்சர் அடித்த சௌத்தி

டெஸ்ட் அரங்கில் ஓர் இன்னிங்ஸில் 9 சிக்ஸர்களை அடித்த மூன்றாவது வீரர் என்ற பெருமையை 19 வயதான சௌத்தி நேற்றுப் பெற்றுக்கொண்டார். ஏற்கனவே இன்ஸமாம், கிறிஸ் கெய்ன்ஸ் ஆகியோர் டெஸ்ட் போட்டிகளில் ஓர் இன்னிங்ஸில் 9 சிக்ஸர்களை விளாசியுள்ளனர். ஓர் இன்னிங்ஸில் அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் வசீம் அக்ரம் (12), நதன் அஸ்ரில் (11), மத்தியூ ஹைடன் (11), வெலி ஹமொண்ட் (10) ஆகியோரை அடுத்து சௌத்தி இடம்பிடித்துள்ளார்.

553 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கைக் கலைத்த நியூஸிலாந்து அணி நேற்று ஆரம்பமான ஐந்தாம் நாள் ஆட்டத்தை 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 222 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆரம்பித்தது. ரெய்லர் 34 ஓட்டங்களுடனும், மக்கியூலம் 24 ஓட்டங்களுடனும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

இருவரும் சிறப்பாக ஆடி இங்கிலாந்தின் இலகு வெற்றிக்கு தடை போட்டனர். இந்த ஜோடி தம்மிடையே 104 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்த நிலையில் ரோஸ் ரெய்லர் 74 ஓட்டங்களுடன்(14 பவுண்டரிகள்) பனிஷரின் சுழலில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். தொடர்ந்து மிரட்டிய பனிஷர், 42 ஓட்டங்களுடன் மக்கியூலத்தை 'போல்ட்' ஆக்கினார்.

பின்னர் வந்த வீரர்களில் அணித்தலைவர் வெட்ரோறி 43 ஓட்டங்களையும், ஜீற்றன் பட்டேல் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தனர். இங்கிலாந்து அணி 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 347 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது கடைசி விக்கெட்டில் சௌத்தி - மாட்டின் ஜோடி இணைந்தது. இந்த ஜோடி இங்கிலாந்தின் வெற்றியை தாமதப்படுத்தினாலும் தங்களது அணியின் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை.

### தவிர்க்க முடியாத தோல்வி

இங்கிலாந்தின் பந்துவீச்சில் சிறப்பாகச் செயற்பட்ட மொன்றி பனிஷர் 126 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுகளைக்கைப்பற்றி அணியின்வெற்றிக்குவித்திட்டார்.

இறுதியில் நியூஸிலாந்து அணி 118.5 ஓவர்களில் 431 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியைத் தழுவியது. இந்தப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரைச் சுவீகரித்தது.

2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெளிநாட்டு மண்ணில் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி வென்றெடுத்துள்ளது. 2000ஆம் ஆண்டு தென்னாபிரிக்க மண்ணில் டெஸ்ட் தொடரை வென்றிருந்தது. அத்துடன் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் ஒன்றில் வெளிநாட்டு மண்ணில் இங்கிலாந்து அணிக்கு 7 வருடங்களில் பின்னர் வெற்றி கிடைத்துள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது. 3ஆவது போட்டி மற்றும் போட்டித் தொடரின் சிறப்பாட்டக்காரர் விருதுகளை சைட்பொற்றம் வென்றெடுத்தார். இவர் இத்தொடரில் 24 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்.

## சென்னை டெஸ்ட்
## தென்னாபிரிக்கா சிறப்பான ஆரம்பம்

சென்னையில் நேற்று ஆரம்பமான இந்திய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது. நேற்று நிறைவுபெற்ற முதல் நாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா அணி தனது முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 304 ஓட்டங்களைப் பெற்று மிகவும் ஸ்திரமான நிலையில் உள்ளது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள தென்னாபிரிக்கா அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றுகின்றது. தொடரின் முதல் போட்டி நேற்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய கிரேம் சிமித், மக்கென்ஸி ஜோடி அணிக்கு சிறப்பான அடித்தளம் அமைத்துக்கொடுத்தனர். இந்திய வேகங்கள் சோடைபோக இருவரும் சிறப்பாக ஆடி அரைச்சதங்களை நிறைவுசெய்தனர். இந்த ஜோடி 132 ஓட்டங்களை முதல் விக்கெட்டுக்காகப் பகிர்ந்திருந்த நிலையில் கிரேம் சிமித் 73 ஓட்டங்களுடன் கும்ளேயின் சுழலில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

### ஹர்பஜனின் சுழலில் வீழ்ந்த மக்கென்ஸி

மறுமுனையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த மக்கென்ஸி 94 ஓட்டங்களுடன் ஹர்பஜனின் சுழலில் வீழ்ந்தார். 156 பந்துகளை எதிர்கொண்ட அவர் தனது ஓட்ட எண்ணிக்கையில் 18 பவுண்டரிகளையும் சேர்த்திருந்தார்.

தொடர்ந்து களம் புகுந்த ஹசீம் அம்லா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றார். மறுமுனையில் வந்த ஜக் கலிஸ் 13 ஓட்டங்களுடனும், அஸ்வெல் பிரின்ஸ் 23 ஓட்டங்களுடனும் முறையே ஹர்பஜன், கும்ளே பந்துவீச்சில் விக்கெட்டைப் பறிகொடுத்தனர்.

நேற்று முதல் நாள் ஆட்டம் முடிவடையும் போது தென்னாபிரிக்கா அணி தனது முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 304 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஹசீம் அம்லா 85 ஓட்டங்களுடனும், டீ வில்லியர்ஸ் 10 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் தொடரும்.

## மேற்கிந்தியத் தீவுகளுக்கு இலக்கு 437 ஓட்டங்கள்

கயானா, மார்ச் 27

கயானாவில் நடைபெற்றுவரும் இலங்கை அணியுடனான முதல் டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு வெற்றி இலக்காக 437 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடும் மேற்கிந்தியத் தீவுகள் அணி, நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 96 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இன்னும் ஒரு நாள் ஆட்டம் மீதமுள்ள நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றிபெறுவதற்கு 341 ஓட்டங்களைப் பெறவேண்டும். அணியின் கைவசம் 9 விக்கெட்டுகள் உள்ளன. களத்தில் சர்வான் 34 ஓட்டங்களுடனும், டெவன் சிமித் 46 ஓட்டங்களுடனும் நம்பிக்கை தருகின்றனர். இலங்கை அணியின் பந்துவீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்படும் பட்சத்தில் மேற்கிந்தியத் தீவுகள் மண்ணில் முதல் டெஸ்ட் வெற்றியை இலங்கை அணி பதிவுசெய்துகொள்ளும்.

முன்னதாக, நேற்றுமுன்தினம் நடைபெற்ற நான்காம் நாள் ஆட்டத்தை மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 269 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆரம்பித்தது. 'பலோ-ஒன்' நிலையைத் தவிர்ப்பதற்கு 9 ஓட்டங்கள் தேவையென்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய இறுதி ஜோடி, அதில் வெற்றியும் கண்டது.

இறுதியில் மேற்கிந்தியத் தீவுகளின் முதல் இன்னிங்ஸ் 111.5 ஓவர்களில் 280 ஓட்டங்களுக்குள் முடிவுக்கு வந்தது. ஜெரோமி ரெய்லர் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இலங்கை அணியின் பந்துவீச்சில் துஸரா மிராண்டோ, சமிந்த வாஸ்,முரளிதரன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

### வர்ணபுரவின் சிறப்பான ஆரம்பம்

196 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கைக்கு வர்ணபுர சிறப்பான ஆரம்பத்தை அளித்தார். அதிரடியாக ஆடிய அவர் 62 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சமரவீர ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களை 5 பவுண்டரிகளுடன் பெற்றுக்கொடுத்தார். இலங்கை அணி தனது இரண்டாம் இன்னிங்ஸை 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 240 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது இடைநிறுத்திக்கொண்டது.

முதல் இன்னிங்ஸில் 196 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு 437 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இலக்கைக் கலைத்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஆரம்பத்திலேயே சமிந்த வாஸ் அதிர்ச்சியளித்தார். இவரது வேகத்தில் ஆரம்ப வீரராகக் களமிறங்கிய டெவன் சிமித் 10 ஓட்டங்களுடன் மிராண்டோவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து இணைந்த பிராவோ - சர்வான் ஜோடி 4ஆம் நாள் ஆட்டத்தில் மேலதிக விக்கெட் இழப்பைத் தவிர்த்தது. நேற்று முன்தினம் நிறைவுபெற்ற நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது இரண்டாம் இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 96 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்று கடைசி மற்றும் ஐந்தாம் நாள் ஆட்டம் நடைபெறவிருந்தது.

# ஷியா போராளிகள் - அமெ. கூட்டுப்படை பாக்தாத்தின் தென்நகரில் கடும் சண்டை

பாக்தாத், மார்ச் 27

பாக்தாத்தின் தென்நகரான பஸ்ராவில் ஷியா போராளிகளுக்கும், அமெரிக்க - ஈராக்கிய கூட்டுப் படைகளுக்கும் இடையே கடந்த இரு தினங்களாக நடைபெற்றுவரும் மூர்க்கமான சண்டையில் இதுவரை 55 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என நேற்று புதன்கிழமை, அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இம் மோதல்களின்போது 300க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். ஷியாக்களின் முக்கிய நகரமான பஸ்ராவிலே அதிகளவில் உயரிழப்புக்கள் இடம் பெற்றுள்ளன. அங்கு 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.200 பேர் வரை காயமடைந்துள்ளனர் என, ஈராக்கிய இராணுவப் பேச்சாளர் கேர்ணல் கரீம் அல்- சாய்டி தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் ஈராக்கிய பாதுகாப்புப் படைகளுக்கும் ஷியா போராளிகளுக்குமிடையிலான சண்டை விரிவடைந்துள்ளது. பஸ்ராவில் ஆரம்பமான இச் சண்டை நாட்டின் இதர ஷியா பகுதிகளுக்கும் பரவியுள்ளது.

பல்வேறு போராளிகள் குழுக்களும், குற்றச் செயல்களில் ஈடுபடும் கோஷ்டிகளும் பஸ்ராவில் ஈராக்கிய பாதுகாப்புப் படைக்கு எதிராக போராடி வருகின்றன. இதனால் பஸ்ராவில் இயல்பு நிலை பாதிப்புக்குள்ளாகியுள்ளது. பாக்தாத்திலிருந்து பஸ்ராவுக்கு மூன்று ஈராக்கிய பிரிகேடியர்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸ்ரா வன்முறைகளை ஒடுக்கும் நடவடிக்கைகளில், 15,000 துருப்புகள் வரை ஈடுபடுத்தப்படும் என பாக்தாத் படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது. தீவிரவாத மெஹ்தி இராணுவத்தின் தலைவரும், இளம் மதகுருவானருமான மொஹட்டா சதர், ஒத்துழையாமை சிவில் இயக்கத்தை நாடெங்கும் மேற்கொள்ளுமாறு, தம் ஆதரவாளர்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளார். இவர் கடும் போக்கை பின்பற்றுபவராவார்.

மொஹிதி போராளிகளின் கோட்டைகள் எனக்கருதப்படும்பகுதிகளில்மூர்க்கமானசண்டைகள் மூண்டுள்ளனவென இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. பஸ்ரா, குட், சமவா, நஸ்ரியா, ஷிலா ஆகிய பகுதிகளில் பொலிஸாரால் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## பிரதமர் பதவியில் ஜிலானி ஐந்து ஆண்டுகள் நீடிப்பார்
### சர்தாரி அறிவிப்பு

இஸ்லாமாபாத், மார்ச் 27

பாகிஸ்தானில் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கும் ஜிலானி, அடுத்த 5 ஆண்டுகளுக்கும் அதே பதவியில் நீடிப்பார் என்று மக்கள் கட்சித் தலைவர் ஆசிப் சர்தாரி அறிவித்துள்ளார்.

ஜிலானி இடைக்காலப் பிரதமராக மட்டும் இருப்பார் என்றும், இடைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றதும் சர்தாரி பிரதமர் ஆகத் திட்டமிட்டுள்ளார் என்றும் ஆரம்பத்தில் செய்திகள் வெளியாகின. இதைத் தற்போது ஆசிப் சர்தாரி மறுத்திருக்கிறார். இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

''ஜிலானி 3 மாதங்களுக்கு அல்ல, 5 ஆண்டுகளுக்குப் பிரதமராக நீடிப்பார். மக்தூம் அமீன் பாஹிமை பிரதமராக நியமிக்காமல் ஜிலானியை பிரதமராக நியமித்ததற்கான காரணம் என்ன என்பதை நான் கூட்டணித் தலைவர்களிடம் விளக்கியுள்ளேன். பிரதமர் ஆவதில் எனக்கு ஆர்வம் இல்லை.

''ஜிலானி கட்சிக்கு அதிகம் விசுவாசமானவர். அவர் சிறையில் அடைக்கப்பட்டு இருந்தபோது, படுக்கை வசதி இல்லாமல் படுத்து உறங்கியவர். எந்த உதவி கேட்டும் தனது செல்வாக்கான நண்பர்களை அவர் தொடர்பு கொண்டதில்லை. சிறையில் 4 ஆண்டுகள் இருந்தபோதும் கட்சிக்கு விசுவாசமாக இருந்தார். என் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தார். அதுமட்டுமல்லாமல் அவர் மிகுந்த நேர்மையானவர்; புத்திசாலி. அத்தோடு அவர் மக்களைக் கவரக்கூடிய அளவுக்கு வசீகரமானவர்.'' - இவ்வாறு ஆசிப் சர்தாரி தெரிவித்தார்.

## வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் திபெத்திற்குள் நுழைய அனுமதி

பீஜிங், மார்ச் 27

திபெத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்செயலுக்குப் பின்னர், முதன்முதலாக வெளிநாட்டு ஊடகவியலாளர்களைக் கொண்ட குழுவொன்றுக்கு பிராந்தியத் தலைநகரான லாஸாவுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது என சீனா தெரிவித்துள்ளது. அத்துடன் அரசு விரோத ஆர்ப்பாட்டங்களில் சம்பந்தப்பட்ட நூற்றுக்கணக்கான திபெத்தியர் சரணடைந்துள்ளனர் எனவும் சீனா அறிவித்துள்ளது.

திபெத்திய தலைநகரான லாஸாவில் மார்ச் 14ஆம் திகதி சீன அரசுக்கு விரோதமான ஆர்ப்பாட்டங்கள் உச்சநிலையை அடைந்தன. நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் சீனர்களின் உடைமைகளுக்கு தீமூட்டுவதிலும், சீனர்களைத் தாக்குவதிலும் ஈடுபட்டார்கள்.

இதையடுத்து, ஆர்ப்பாட்டங்களை ஒடுக்குவதில் ஈடுபட்ட சீனா, சரணடையுமாறு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு காலக்கெடு விதித்திருந்தது.

அத்துடன், வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் திபெத்தியத் தலைநகருக்குச் செல்வதற்குத் தடைவிதித்திருந்தது. அனைத்துப் பகுதிகளிலும் ஊடகவியலாளர்களின் நடமாட்டங்களும், பணிகளும் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

கிளர்ச்சிகள் தலைதூக்கிய லாஸாவிலும் சிசுவான் மாகாணத்திலும் 600 இற்கு மேற்பட்டவர்கள் பொலிஸில் சரணடைந்துள்ளார்கள் என சீன அரச ஊடகம் தெரிவித்துள்ளது. பொலிஸ் வட்டாரமும் தேடப்படும் 53 பேரின் பெயர் விலாச விவரங்களடங்கிய பட்டியலொன்றையும் வெளியிட்டுள்ளது.

## வன்னியில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் 11 பேரையும் எதிர்வரும் 9ஆம் திகதிவரை யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவன் உத்தரவிட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவைச் சேர்ந்த செபஸ்ரியாம்பிள்ளை ஜோன் பிள்ளை, அவரது மனைவியான மேரி ஜசிந்தா மற்றும் 5 மாதக் குழந்தையான விதுஷன் -

புதுக்குடியிருப்பு, சிவன் நகரைச் சேர்ந்த செந்தமிழ்ச்செல்வம் துஷிகலா, இரவது பிள்ளைகளான நிஷாந்தன், கோவிதன் மற்றும் கோவிந்தன்.

விசுவமடு, கோட்டையடியைச் சேர்ந்த வின்சன்ட் யூட்சன், தாளையடி செம்பியன்பற்றைச் சேர்ந்த சகோதரர்களான ஆனந்தன், ரஜதன் மற்றும் ரஜித் ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்கள் ஆவர்.

இதேவேளை கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் வழங்கிய வாக்குமூலத்தில், வன்னிப் பகுதியில் நிலவுகின்ற யுத்த சூழ்நிலை காரணமாகவே தாங்கள் இந்தியாவுக்குச் சென்று அகதியாக வாழத் தீர்மானித்து படகில் புறப்பட்டதாகவும் -

அவ்வாறு சென்றுகொண்டிருந்த சமயம் கச்சதீவை அண்மித்த பகுதியில் கடற்படையிரிடம் கிக்கிக் கொண்டதாகவும் - தெரிவித்துள்ளனர். (அ-2)

## லியம் பொக்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அப்போதைய அரசுக்கு ஒத்துழைப்பு நல்குவது குறித்து ரணில் விக்கிரமசிங்கவுடன் லியம் பொக்ஸ் ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் நீர்கொழும்பைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களில் ஒருவர் தமிழர் என்றும் ஏனையவர்கள் சிங்கவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

காயமடைந்தவர்களைப் படையினர் ஹெலிக்கொப்டர் மூலம் உடனடியாக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று சிகிச்சைக்காக சேர்த்திருக்கின்றனர் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் இராணுவப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என்று கூறப்பட்டது.

இந்த விசாரணைகளின்போது கைதுசெய்யப்பட்டவர்கள் கூறியவை வருமாறு:-

"2007ஆம் ஆண்டு 10ஆம் திகதி விடுதலைப் புலிகள் மூன்று படகுகளில் எம்மைக் கடத்திச் சென்று அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள முரசுமோட்டைப் பகுதியில் தடுத்து வைத்திருந்தனர்.

அங்கிருந்து நாங்கள் நான்கு நாட்களுக்கு முன்னர் தப்பிவந்து இன்று பகல் (நேற்று) ஓமந்தை புலிகளின் முன்னரங்கப் பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி ஓடிவந்தோம். இதன்போது புலிகள் எங்கள்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். அதேநேரம் படையினரும் எங்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் எம்மைச் சேர்ந்த மூவர் உயிரிழந்தனர். மூவர் காயமடைந்தனர்.

நாங்கள் புலிகளின் பகுதியிலிருந்து தப்பி வந்த போது எங்களுடன் ஓடிவரமுடியாமல் கஷ்டப்பட்ட ஒருவரை புலிகளின் பிரதேசத்தில் கைவிட்டு வந்தோம்" - என்று தெரிவித்திருக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுக்குத் தகவல் தெரிவித்து இறந்தவர்களை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கைஎடுக்கும்படி வவுனியாப் பொலிஸாருக்கும் -

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸாரிடம் ஒப்படைக்கும்படி இராணுவப் பொலிஸ் அதிகாரிக்கும் வவுனியா நீதிபதி எம். இளஞ்செழியன் உத்தரவிட்டிருக்கிறார். (சி)

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உன்னிச்சைக்குச் செல்லவிருந்தனர்.

அவர்களின் பயணத்திற்கு முன்னதாக அப்பகுதிக்குச் செல்லும் வீதியில் பாதுகாப்பு ஏற்பாடுகளை கண்காணிப்பதற்குச் சென்ற சிறப்பு அதிரடிப் படையினரையும், பொலிஸாரையும் உள்ளடக்கிய குழுவின் மீதே இக்கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

"பலகை ஒன்றின் கீழ் வீதியோரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டு தூரத்திலிருந்து இயக்கப்படும் கருவி மூலம் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது" - என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இத்தாக்குதலில் சம்பவ இடத்திலேயே கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார். படுகாயமடைந்த மற்றொரு கான்ஸ்டபிள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயமடைந்த இரு அதிரடிப்படையினரும் இரு பொலிஸாரும் மட்டக்களப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது. (உ)

## இணைந்த வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பிரதான எதிர்க்கட்சிகளான ஐ.தே. கட்சியும், ஜே.வி.பியும் ஏற்கனவே பகிஷ்கரித்து வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் பெறும் கட்சிகள் இந்தக் கட்டமைப்புக்கு அழைக்கப்படவேயில்லை.

ஆக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், ஏனைய அரசுத் தரப்புக் கட்சிகளுமே இந்த அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் கூட்டங்களில் பங்குபற்றி வருகின்றன.

இந்நிலையில் இந்தக் குழுவின் அமர்வுகளுக்கு பிள்ளையான் குழுவின் (தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின்) பிரதிநிதிகளையும் அழைக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்து, அதுவரை குழு அமர்வுகளைத் தாங்கள் புறக்கணிப்பார்கள் எனத் தெரிவித்து, ஜாதிக ஹெல உறுமயவினரும், மக்கள் ஐக்கிய முன்னணியினரும் (அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் கட்சியினரும்) குழுவின் கூட்டங்களைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகளும் அண்மைக்காலமாக இந்தக் குழுவின் கூட்டத்தில் பங்குபற்றுவதில்லை என்று கூறப்படுகின்றது.

இந்தப் பின்னணியிலேயே கடைசி நான்கு, ஐந்து தினங்களாக இடம்பெற்ற குழுவின் கூட்டங்களில் இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தனியான அலகு பற்றிய உடன்பாடு எட்டப்பட்டிருக்கின்றது.

அமைச்சர் பேரியல் அஷ்ரப், அமைச்சர் அமீர் அலி, அமைச்சர் அதாவுல்லா ஆகியோர் தலைமையில் அரசுடன் இணைந்திருக்கும் மூன்று முஸ்லிம் கட்சிகளும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் கூட இந்தத் திட்டத்துக்கு முழுச் சம்மதம் தெரிவித்திருக்கின்றன.

ஏனைய இடதுசாரிக் கட்சிகளும், இ.தொ.காவும் கூட இத்திட்டத்தை முன்னின்று ஆதரித்து அங்கு ஓர் இணக்கநிலை ஏற்படுவதற்கு குழுவின் அமர்வுகளில் முனைப்பாக முயற்சித்தன எனக் கூறப்படுகின்றது.

இந்த இணக்கம் ஏகமனதாக எட்டப்பட்டபோது ஐ.தே.கட்சி அதிருப்திக்குழுவைச் சேர்ந்த அமைச்சர் பி. தயாரத்னவும் அந்த அமர்வில் பங்குபற்றியிருந்தார்.

இப்போது எட்டப்பட்டுள்ள இந்த இணக்கம், அனைத்துக் கட்சிப் பிரிதிநிதிகள் குழு இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சிபாரிசு செய்யும் இறுதித்திட்டவரைவில் இடம்பெற்றிருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

"முஸ்லிம்களின் கலந்தாலோசனையின்றி வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டமையை அப்போது நாம் எதிர்த்தோம். இப்போது தமிழ், முஸ்லிம் மக்களின் கலந்தாலோசனையின்றி வடக்கு - கிழக்குப் பிரிக்கப்படுவதை இன்னும் கடுமையாக எதிர்க்கின்றோம்."- என மேற்படி அமர்வுகளில் பங்குபற்றி வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதி நிஸாம் காரியப்பர் தெரிவித்தார். (உ)

## இலங்கை ஆயுத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துகளை வெளியிட்டார்.

எம்.கே.நாராயணன் தனது உரையில் குறிப்பிட்ட அம்சங்கள் வருமாறு:-

இலங்கையில் போர்நிறுத்த ஒப்பந்தம் முறிந்து போயுள்ள ஆபத்து வந்துள்ளது. இது திடீரென வந்த மின்னல் போன்ற நிலைக்குத் தள்ளியுள்ளது.

இலங்கை அங்கு வாழும் தமிழர்களை கௌரமாக நடத்தவேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு. ஆனால் அதிகாரப் பகிர்வு எதனையும் வழங்காமல் இராணுவ வெற்றியிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளது. வேறு இடங்களிலிருந்து இலங்கை ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதால், தென்னாசியாவில் இந்தியாவுக்கு உள்ள பிரச்சித்தமான இடத்துக்குப் பாதிப்பு நேரிடும். இது கவலைக்குரியது. அத்தகைய நிலை உருவாகாமல் நாம் தடுத்தாகவேண்டும்.

இலங்கைக்கு எந்தளவுக்கு இராணுவ உதவி வழங்கவேண்டும் என்பது குறித்து எமக்கிடையே தேசிய அளவிலான இணக்கம் தேவை. இலங்கை மீது எந்தவிதமான, எந்த அளவுக்கு அழுத்தம் போட வேண்டும் என்பதிலும் இணக்கம் தேவை.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண்பதை இந்தியா எதிர்க்கிறது. அந்நாட்டு அரசு அங்குள்ள சிறுபான்மையினருக்கு தன்னாட்சி அதிகாரப் பகிர்வு வழங்கவேண்டும் என்பதே எமது நாட்டின் நிலைப்பாடு - நாராயணன் தமது உரையில் தெரிவித்தார். (அ)

## வன்னியில் வான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்குவைத்து நேற்றுக்காலை 10.15 மணியளவில் விமானப்படையினரின் 'எம்.ஐ. 24' ரக ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல்களை நடத்தின என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, முல்லைத்தீவு, விஸ்வமடுக் குளம் பகுதியில் உள்ள கடற்புலிகளின் படகுக் கட்டுமானத் தளத்தை இலக்கு வைத்து நேற்றுக் காலை 10.15 மணியளவில் விமானப்படையினரின் விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது.

இத்தாக்குதல்கள் குறித்து வன்னியில் இருந்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (சி)

## இங்கு மனித உரிமை...

(முதலாம் பக்கம் பார்க்க)

விளங்குகின்றன. அரச படைகள், விடுதலைப்புலிகள் மற்றும் கருணா குழுவினால் மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோதப் படுகொலைகள், காணாமற்போகச்செய்தல் மற்றும் சிறுவர்களைப் படையணிகளில் சேர்த்தல் என்பன தொடர்கின்றன.

இலங்கையின் மோதலிற்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கான எமது அணுகுமுறையின் முக்கிய பகுதியாக மனித உரிமை மீறல்களுக்குத் தீர்வு காண்பது அமைகின்றது.

**சமாதானத்தை ஏற்படுத்த மனித உரிமை பேணப்படவேண்டும்**

இதன் காரணமாக இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து முழுமையாக விசாரணை செய்வதும், குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவதும் மிக முக்கியமானவையாகும்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கண்காணிப்புக்குழுவை ஏற்படுத்துமாறு 2006 டிசம்பரில் ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த வேண்டுகோளை பிரிட்டன் ஆதரித்துள்ளது.

சர்வதேச பிரமுகர்களைக் கொண்ட சுயாதீனக் குழுவில் இடம்பெறுவதற்கு பேராசிரியர் சேர் நைகெல் ரொட்லியை பிரிட்டன் நியமித்தது. மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதே சர்வதேச பிரமுகர்கள் குழுவின் நோக்கம்.

**பிரேரணையை நிறைவேற்றுவது சாத்தியம் இல்லை**

இலங்கையில் 2006 - 2009 இற்குள் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பிரிட்டனின் தந்திரோபாயத்தின் முக்கிய நோக்கமாக சமூகங்களின் பாதுகாப்பை அதிகரிப்பதும், மனித உரிமைகளைப் பேணுவதும் அமைகின்றன.

சட்டமுறைமை மூலமாக அநீதியை எதிர்க்கக்கூடிய திறனுள்ளவையாக உள்ளூர் சமூகங்களை மாற்றுவதை நாங்கள் ஊக்குவிக்கின்றோம்.

மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை, உள்ளூர் மட்ட உரையாடல்கள் போன்றவற்றையும் நாம் ஊக்குவிக்கின்றோம். ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பாதுகாக்கும் பணியில் யுனிசெவ் அமைப்புடன் இணைந்து செயற்படுகின்றோம்.

இலங்கையில் மீண்டும் மோதல் மூண்டதைத் தொடர்ந்து வன்முறைகள் அதிகரிப்பது குறித்த தனது கவலையைப் பிரதிபலிக்கும் விதத்தில் பிரேரணையொன்றை ஐரோப்பிய ஒன்றியம் கொண்டுவந்தது.

இது தொடர்பாக ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதுக்குழுவுடனும், இலங்கை அரசுடனும் ஐரோப்பிய ஒன்றியம் தீவிர பேச்சுகளை மேற்கொண்டது. இந்தப் பிரேரணையை இலங்கையை ஏற்றுக்கொள்ளச்செய்வதே இதன் நோக்கம்.

எனினும், இது சாத்தியமாகவில்லை. இதன் காரணமாக இந்தப் பிரேரணையை பரிசீலிப்பதை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கவுன்ஸில் கைவிட்டது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)


# கொக்குவில் இந்து - யாழ்.இந்து

மாபெரும் கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு

**உதயன்**

மாணவர்களுக்கும் பாடசாலைகளுக்கும் வழங்கும் விஷேட பரிசில்கள்.

மாணவர்களே! நீங்கள் எல்லோரும் வயது, வகுப்பு வேறுபாடின்றி இப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

ஒரே கேள்வி - பதிலளித்துப் பரிசு பெறுங்கள்

**பணப் பரிசில்கள்**

| மாணவர்களுக்கு | பாடசாலைகளுக்கு |
| --- | --- |
| 1) ரூ. 5,000/= | 1) ரூ. 10,000/= |
| 2) ரூ. 3,000/= | 2) ரூ. 5,000/= |
| 3) ரூ. 1,500/= | 3) ரூ. 3,000/= |

போட்டி விதிகள்

* குடாநாட்டில் உள்ள சகல பாடசாலைகளையும் சேர்ந்த மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்லாம்.
* இப்போட்டி பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமே.
* விடையை கீழே உள்ள கூப்பனில் நிரப்பி பாடசாலை அதிபரிடம் அல்லது பகுதித் தலைவரிடம் ஒப்படைக்கவும்.
* விடைக்கூப்பனை பாடசாலை அதிபர் அல்லது பகுதித் தலைவரைக் கொண்டு உறுதிப்படுத்துவது அவசியம்
* பாடசாலைகள் தமது மாணவர்களின் கூப்பக்களைச் சேர்த்து வைத்து 28.03.2008 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கலாம்.

உதயன் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிலும் கூப்பன்களை இடலாம்.

கொக்குவில் இந்து - யாழ்.இந்து

மாபெரும் கிரிக்கெட் போட்டி - 2008

மாணவர்களுக்கு உதயன் நடத்தும் விஷேட போட்டி

மாணவனின் பெயர்:..............................

பாடசாலையின் பெயர்:..............................

இப்போட்டியில்..............................

கிரிக்கெட் குழுவே வெல்லும்.

.............................. ..............................

மாணவனின் கையொப்பம் அதிபர் அல்லது பகுதித் தலைவரின் கையொப்பம்

இக் கேள்விக்கு மட்டும் பதில் அளியுங்கள்.

எதிர்வரும் 29 ஆம் 30 ஆம் திகதிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள கொக்குவில் இந்துக் கல்லூரி - யாழ். இந்துக் கல்லூரி இடையேயான கிரிக்கெட் போட்டியில் வெல்லப் போகும் பாடசாலை அணி எது?



"இதோ! நான் உன் அருகில்......"



உயிர்ப்பு பஜனை

உடுவில் மகளிர் கல்லூரி

இடம்: உடுவில் கல்லூரி மண்டபம்

காலம்: 28.03.2008

நேரம்: பி.ப. 3.30 மணி, வெள்ளிக்கிழமை



சண்டிலிப்பாய் ஐடியலின் புதிய கிளை மானிப்பாயில்

ஐடியல் அக்கடமி மானிப்பாய்

(மக்கள் வங்கி முன்பாக)

தரம் 6 முதல் O/L, A/L வரை

தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புகள்

ஆரம்பம்: 09.04.2008, புதன் 4pm

நிர்வாகியும் கணிதஆசானும்

V.N.பத்மநாதன்



A/L வரலாறு 2008

6 மாதிரிப் பரீட்சைகள்

பரீட்சை நடை பெறும் இடங்கள் பொருளிய கல்லூரி-யாழ்ப்பாணம், இணுவில், பாரதி-சித்தங்கேணி, புகழ்-சுதுமலை

வெளிமாணவரும் பரீட்சைக்குத் தோற்றலாம். அனுமதிகள் மேற்படி நிறுவனங்களில்.

முதலாவது பரீட்சை 18.04. 2008(வெள்ளி)

A/L 2010 புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

ஆசிரியர் K.சுதன்
B.A(HONS)
History (SPI)



ஆரம்பம்:

சனி மதியம்: 12 மணி

| பாடம் | ஆசிரியர் | நேரம் |
| --- | --- | --- |
| CHEMISTRY | வாகீசன் | 12.00 |
| PHYSICS | பிரபா | 1.30 |

அலகுரீதியான வினா விடை வகுப்பு

DMI

நாவலர் வீதி.



PHYSICS

A/L 2010

Mechanics

ஆரம்பம்:

29.05.2008

Sat3.00Pm (Sat. Sun - 3.00-4.00Pm)

By.K.Selvan

NAVALAR JAFFNA.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.